# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 21 திங்கட்கிழமை (05-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:223


### மட்டக்களப்பில் விளக்கமறியலில் உள்ள சச்சி மாஸ்டரே மாறன் ஆக நடிப்பு

# சிறையிலிருக்கும் கருணாவின் ஆளை பயன்படுத்திப் புலி எதிர்ப்புப் பிரசாரம்

## இராணுவப் புலனாய்வுப் பிரிவு மீது விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை5

**அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் பிடிபட்டு தற்போது மட்டக்களப்புச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் கருணாவின் ஆள் ஒருவரை புலி எதிர்ப்புப் பிரசாரத்துக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு பயன்படுத்தி வருகின்றது.**

**விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார்.**

சிறையில் இருக்கும் கருணாவின் ஆளுக்குக் கைத்தொலைபேசி ஒன்றை வழங்கச் செய்து, அதன்மூலம் தாம் ஆதரவு அளிக்கும் தமிழ் வார இதழ் ஒன்றுக்கும், வானொலி நிலையம் ஒன்றுக்கும் விடுதலைப் புலி எதிர்ப்புப் பிரசாரப் பேட்டிகளை வழங்க இராணுவப் புலனாய்வுத் துறை ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளது என்றும் குற்றம் சுமத்தினார் புலிகளின் மூத்த தலைவர்.

மாறன் என்ற பெயரில் கருணா அணிப் பேச்சாளராக வேடமிட்டு வானொலிப் பேட்டிகள், செய்திகளைக் கொடுப்பவர் உண்மையில் தற்போது மட்டக்களப்புச் சிறையில் விளக்கமறியலில் இருக்கும் சச்சி மாஸ்டர் (கணபதிப் பிள்ளை மகேந்திரன்)தான் என்று கூறும் அவர்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. குருநகர் பொறுப்பாளர் வாளால் வெட்டப்பட்டு படுகாயம்!

### பொதுமக்களுடன் வாக்குவாதப்பட்டபோது சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் குருநகர் பிரதேச பொறுப்பாளர் இளங்கோ றீகன் (வயது 28) நேற்று மாலை வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

திருநகர்ப் பகுதியில் - இராஜசிங்கம் வீதியில் மற்றொரு உறுப்பினருடன் மோட்டார் சைக்கிளில் வந்த சமயமே இவர் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் அப்பகுதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவரை மோதியது என்றும் இதனையடுத்து அவ்விடத்தில் கூடிய பொதுமக்களுக்கும் பொறுப்பாளருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

இதன்போது ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் பிஸ்டலைக் காட்டி பொதுமக்களை அச்சுறுத்தினார் என்றும் கூறப்படுகிறது.

பொதுமக்களுடன் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்த சமயம் பின்பக்கமாக இருந்து அவரது தோள்மூட்டுப் பகுதியில் வாளால் வெட்டப்பட்டிருக்கிறது என்று யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

பொறுப்பாளர் றீகன் வாள்வெட்டுக்கு இலக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் சிறுமி மீது பாலியல் பலாத்காரம்

மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரால் பெலியகமம் எழுத்தூரைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானார் என்று கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கடந்த வெள்ளியன்று பொலீஸார் மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எம்.பி.பாறூக் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், சிறுமியை அனுராதபுரம் வைத்தியசாலைக்கு பரிசோதனைக்கு அனுப்புமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி பாலியல் பலாத்காரம் செய்தவரின் ஒன்றுவிட்ட அக்காவின் மகள் என்றும் மன்றில் தெரிவிக்கப்பட்டது. (க)

# தமிழர் தாயகம் எங்கும் இன்று கரும்புலிகள் தினம் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை5

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஆகுதியாக்கி வரலாறுகள் படைதத கரும்புலிகள் நினைவு தினம் தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

கரும்புலிகள் நினைவு தின நிகழ்வுகளில் போராளிகள், மாணவர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழின விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலாகக் கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது 1987ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்டன் மில்லர் என்ற போராளியே இத்தாக்குதலைக் கனகச்சிதமாக மேற்கொண்டு தமிழின விடுதலைப் போராட்டத்தில் புதிய வரலாறு படைத்தார்.

வெடி மருந்துகள் நிரப்பிய லொறியுடன் சென்று நெல்லியடியில் அமைந்திருந்த இராணுவ முகாமைத் தாக்கித் துவம்சம்செய்து தம்முயிரையும் தமிழினத்துக்காகத் தற்கொடை செய்தார் மாவீரர் கப்டன் மில்லர்.

அந்த முதலாவது கரும்புலித் தாக்குதல் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவமிக்க நாளே தமிழ்த்தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் கரும்புலிகள் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அது தமிழ் மக்களினால் வருடந்தோறும் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

"பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைப்பலத்தை மனோ பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்" என்று வர்ணிக்கிறார் தேசியத் தலைவர் பிரபாகரன்.

"கரும்புலி வீரர்களின் தோற்றமும் அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)






கரும்புலிகள் தினமான இன்று நெல்லியடியில் கரும்புலி கப்டன் மில்லரின் நினைவிடத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அங்கு அமைக்கப்பட்டிருக்கும் ஓர் அலங்கார வளைவையும், கப்டன் மில்லரின் உருவச் சிலையையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: எஸ்.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

## தடகள விளையாட்டு விழாவில் யாழ். மாவட்டம் முதலிடம்!

யாழ்ப்பாணம்,ஜூலை5

கரும்புலிகள் நாளை ஒட்டி தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாடு செய்த இளையோருக்கான தேசிய தடகள விளையாட்டு விழா நேற்று நிறைவடைந்தது. இரண்டு தினங்கள் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில் பங்குபற்றிய யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்திருக்கின்றனர்.

யாழ். மாவட்ட அணி மொத்தம் 149 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தை வென்றது.

118 புள்ளிகளைப் பெற்று திருமலை மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. 71 புள்ளிகளைப் பெற்ற மன்னார் மாவட்ட அணி மூன்றாம் இடத்துக்கு வந்தது.

ஏனைய மாவட்டங்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு:-

| | |
|---|---|
| அம்பாறை | - 63 புள்ளிகள் |
| கிளிநொச்சி | - 56 புள்ளிகள் |
| வவுனியா | - 48½ புள்ளிகள் |
| மட்டக்களப்பு | - 48 புள்ளிகள் |
| முல்லைத்தீவு | - 32 புள்ளிகள் |

சிறந்த பெறுபேற்றின் அடிப்படையில் 200 மீற்றர் தூரத்தை 30.8 விநாடிகளில் ஓடி முடித்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கே.உஷாந்தினி போட்டியில் சிறந்த வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டார்.

14 வயதுப் பிரிவில் சிறந்த வீரனாக திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.முகமட் நசீரும். 14 வயதுப் பிரிவில் சிறந்த பெண் வீராங்கனையாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இ.வாசுகியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

16 வயதுப் பிரிவில் சிறந்த வீரனாக திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த என்.முகமது ரிஸ்வினும், 18 வயதுப் பிரிவில் சிறந்த வீரனாக திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த முகமட் சலீலீலும், 18வயதுப் பிரிவில் சிறந்த வீராங்கனையாக திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த தனிற்றா றோசானியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஜ-86)

## புலிகள் எதிர்ப்புப் போஸ்டர் அரச அச்சகத்தில் தயாரிப்பு!

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கி முனையிலேயே விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றார்கள் என்று சித்திரிக்கும் போஸ்டர் ஒன்றின் ஐம்பதாயிரம் பிரதிகள் அரச அச்சகத்திலே அச்சிடப்பட்டு அவசர அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டு இருக்கின்றன.

இந்த போஸ்டரில் உள்ள சித்திரத்தில் மேடை ஒன்றில் மாணவத் தலைவர் ஒருவர் உரையாற்றுகின்றார். அவருக்குப் பின்னால் இரண்டு கால்களில் எழுந்து நின்று கைகளில் துப்பாக்கி தாங்கி, அந்தத் துப்பாக்கியை அந்தப் பேச்சாளரின் முதுகைத் தொட்டபடி பிடித்திருக்கும் புலி உருவம் ஒன்று "எங்களைப் பற்றி மட்டும் கூறும்" என்று உத்தரவிடுகின்றது.

மேடைக்கு முன்னால் மக்கள் கூட்டத்தின் முன்னணியில் இத்தகைய புலி உருவங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பகுப்பாய்வு அறிக்கை இன்று கையளிப்பு

கடந்த 26ஆம் திகதி அரச அச்சகத்தில் இடம்பெற்ற தீ அனர்த்தம் தொடர்பாக அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் அறிக்கை இன்று கையளிக்கப்படும் என அரச அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

இந்தத் தீ அனர்த்தம் தொடர்பான தீயணைப்புப் படையினருக்கு விரைந்து அறிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இளையோர் விளையாட்டு விழா நேற்றைய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை5

கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் இளையோருக்கான தடகள விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை பூர்த்தியாகின.

நேற்றைய போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரவீராங்கனைகளின் பெயர் விவரம் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

**ஆண்கள்**

★ தட்டெறிதல் - முதலாமிடம் - வி.விதர்சன் (கிளிநொச்சி), இரண்டாமிடம் - த.நிஷாந்தன்(கிளிநொச்சி), மூன்றாமிடம் - அ.ஸ்ரீபன் சஞ்ஜீவன்(கிளிநொச்சி).

★ 80 மீற்றர் தடை தாண்டல் முதலாமிடம் - ர.வதுளன் (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் - ஹ.அஸிம் (அம்பாறை).

★ 100 மீற்றர் ஆண் - முதலாமிடம் - ப.இர்பான் (அம்பாறை), இரண்டாமிடம் - மு.முகமட் நலீம் (திருமலை), மூன்றாமிடம் - வி.விமலசிறி(அம்பாறை).

4X100 மீற்றர் அஞ்சலோட்டழ் - முதலாமிடம் - அம்பாறை, இரண்டாமிடம் - மட்டக்களப்பு, மூன்றாமிடம் முல்லைத்தீவு.

**பெண்கள்**

★ 80 மீற்றர் தடைதாண்டல் - முதலாமிடம் - எஸ்.மேரி ரஜிதா(யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - இ.பத்மசாந்தி (கிளிநொச்சி), மூன்றாமிடம் - ம.புவித்திரா(வவுனியா),

★ 100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் - கு.உசாந்தினி (மன்னார்), இரண்டாமிடம் - ஆ.மேனகா(அம்பாறை), மூன்றாமிடம் - ம.புவித்திரா(வவுனியா).

★ 4X100 மீற்றர் அஞ்சலோட்டம் - முதலாமிடம் - வவுனியா, இரண்டாமிடம் - அம்பாறை.

★ ஈட்டி எறிதல் - முதலாமிடம் - சு.கோகிலவதனி (அம்பாறை), இரண்டாமிடம் - ஜே.அபிகேசி(திருமலை), மூன்றாமிடம் - ச.அனுதனா(வவுனியா).

### 16 வயதுப் பிரிவு

**ஆண்கள்**

★ உயரம் பாய்தல் - முதலாமிடம் - என்.கீதன் (மட்டக்களப்பு), இரண்டாமிடம் - ம.மயூரன்(யாழ்ப்பாணம்), முன்றாமிடம் - இ.சத்தியரட்ணம் (கிளிநொச்சி).

★ ஈட்டி எறிதல் - முதலாமிடம் - மு.முகமது றிஸ்வி (திருமலை), இரண்டாமிடம் - சீ.டிசோக்காந்(மட்டக்களப்பு), மூன்றாமிடம் - ம.திலீபன்(மன்னார்).

★ நீளம் பாய்தல் - முதலாமிடம் - ஆர்.ரமணா (மட்டக்களப்பு) இரண்டாமிடம் - சு.சுயான்(மன்னார்), மூன்றாமிடம் - ம.நேதாஜி(வவுனியா).

★ 4X400 மீற்றர் அஞ்சலோட்டம் - முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் - அம்பாறை, மூன்றாமிடம் - யாழ்ப்பாணம்.

★ குண்டெறிதல் - முதலாமிடம் - கு.விஜிதன் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - ம.திலீபன்(மன்னார்), மூன்றாமிடம் - மு.முகமது றிஸ்வி(திருமலை).

★ 100 மீற்றர் தடை தாண்டல் - முதலாமிடம் - பா.ஜேம்ஸ் ஜெனின்(திருமலை), இரண்டாமிடம் - எஸ்.நிமல்ராஜ்(மட்டக்களப்பு), மூன்றாமிடம் - கொ.நிரோஜன் (திருமலை)

★ 100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் - அ.நபிமுல்லா (திருமலை), இரண்டாமிடம் - ம.நேதாஜி(மன்னார்), மூன்றாமிடம் - சு.கஜானன்(மன்னார்).

★ 4X100 மீற்றர் அஞ்சலோட்டம் - முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் - யாழ்ப்பாணம், மூன்றாமிடம் - மன்னார்.

**பெண்கள்**

★ 4X400 மீற்றர் அஞ்சலோட்டம் - முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் - அம்பாறை, மூன்றாமிடம் - யாழ்ப்பாணம்,

★ நீளம் பாய்தல் - முதலாமிடம்- சொ.திவ்யா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் எஸ்.வேசினி(அம்பாறை), மூன்றாமிடம் மெ.மேரி சுரேக்கா(திருமலை).

★ ஈட்டி எறிதல் - முதலாமிடம் - சீ.தாரணி (கிளிநொச்சி), இரண்டாமிடம் - ம.கௌதமி(யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் - த.அனுஜா(வவுனியா).

★ 100 மீற்றர் தடை தாண்டல் - முதலாமிடம் த.தனுஜா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - ர.சானுஜா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் -. பூ.இலானிக்கா(அம்பாறை),

★ 100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் இ.வாகினி (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - கலைவாணி(வவுனியா), மூன்றாமிடம் - த.தனுகா(திருமலை).

★ 4X100 மீற்றா அஞ்சலோட்டம் : முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் - யாழ்ப்பாணம், மூன்றாமிடம் - மன்னார்.

### 18 வயதுப் பிரிவு

**ஆண்கள்**

★ 4X400 மீற்றர் அஞ்சல் - முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் - மன்னார்.

★ தட்டெறிதல் - முதலாமிடம் - எஸ்.சுரேஸ்(கிளிநொசசி), இரண்டாமிடம் த.பரணீதரன்(யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் - ர.கிரிஷாந் ரங்கா(திருமலை).

★ 110 மீற்றர் தடை தாண்டல் - முதலாமிடம் - எஸ்.பிரசாந்(யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - இ.யக்சன் (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் - கே.எம்.நௌசாத் (மட்டக்களப்பு).

★ 100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் - முகம்மது ஹரீஸ்(திருமலை), இரண்டாமிடம் - எஸ்.பிரசாத்(யாழ்ப்பாணம், மூன்றாமிடம் - ம.முகமட் பவாஸி(திருமலை).

★ 800 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் - ரி.தீபன் (மட்டக்களப்பு), இரண்டாமிடம் - அ.ஜேந்திரன்(யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் அ.நாகேஸ்வரன்(திருமலை).

★ 4X100 அஞ்சலோட்டம் - முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் மட்டக்களப்பு, மூன்றாமிடம் - யாழ்ப்பாணம்.

**பெண்கள்**

★ 800 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம்- சி.சிவரஞ்சினி (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - சு.கெனற்(மன்னார்), மூன்றாமிடம் - த.சிவதர்சினி(மன்னார்).

★ நீளம் பாய்தல் - முதலாமிடம் - ஈ.துவாரகா (கிளிநொச்சி), இரண்டாமிடம் - சி.சசிகலா(மன்னார்), மூன்றாமிடம் - எஸ்.மலர்விழி(மன்னார்).

★ குண்டெறிதல் - முதலாமிடம் - க.பிரியா(அம்பாறை), இரண்டாமிடம் - க.சேதுப்பிரியா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் அ.சுபத்திரா(யாழ்ப்பாணம்).

★ உயரம் பாய்தல் - முதலாமிடம் - க.கலஸ்ரா றொசானி (திருமலை), இரண்டாமிடம் - சி.சிந்துஜா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் - இ.கஜேந்தினி (வவுனியா), இ.அகல்யா (யாழ்ப்பாணம்).

★ 4X400 மீற்றர் அஞ்சலோட்டம் - முதலாமிடம் - யாழ்ப்பாணம், இரண்டாமிடம் - மன்னார், மூன்றாமிடம் .- திருமலை.

★ 100 மீற்றர் தடை தாண்டல் - முதலாமிடம் ஜெ.நிசாந்தினி(யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் இ.அகல்யா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் - த.நிசாந்தினி(திருமலை).

★ 100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம் - க.கலஸ்ரா றொஷானி(திருமலை), இரண்டாமிடம் - இ.துவாரகா (கிளிநொச்சி), மூன்றாமிடம் - ஆ.பிரியா(அம்பாறை),

★ 4X100 மீற்றர் அஞ்சலோட்டம் - முதலாமிடம் - திருமலை, இரண்டாமிடம் - வவுனியா, மூன்றாமிடம் - யாழ்ப்பாணம். (5-86-190)

# செய்திக்கு மறுப்பும் உதயனின் விளக்கமும்

யாழ்ப்பாணம்,ஜூலை5

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாமனிதர் பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை நிகழவில் கலந்துகொண்ட தமக்கு, எதிர்ப்பு எதுவும் காட்டப்படவில்லை என்றும் பதாகைகள் எதுவும் கட்டப்பட்டிருக்கவில்லை என்றும் - பேராசிரியர் சா.இ.ஹே.கூல் உதயனுக்கு அறிவித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக அவர் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

*"இன்றைய உதயனை வாசித்து மிக அதிர்ச்சி அடைந்தேன். அதில் நான் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்த உரையைக் கேட்கப் போனபோது எனக்குத் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததாகவும், பட்ட பதாகைகள் தொங்கவிடப்பட்டதாகவும் கூறப்பட்டது. மட்டுமல்ல, படமும் போடப்பட்டிருந்தது. அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அப்படமும் பொய்ப் பிரசாரத்துக்காக எடுக்கப்பட்டது. இதற்கு அங்கே இருந்தவர்கள் பிரதானமாக வேந்தரும் துணைவேந்தரும் சாட்சியாக இருப்பார்கள்.*

*"மேலும் எனது பெயர் சாமுவேல் இரத்தினஜீவன் ஹேபேட் கூல். "UTHR (யாழ் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைக்கான ஆசிரியர் குழு) அறிக்கைகள் எழுதுவது நானில்லை" - என்பதாகும்.*

**ஆசிரியர் குறிப்பு :**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினரான பேராசிரியர் சாமுவேல் ரட்ணஜீவன் **றொபேர்ட்** கூல் எனச் செய்தியில் வெளியான பெயர் -

சாமுவேல் ரட்ணஜீவன் ஹேபேர்ட் கூல் என்று இருந்திருக்க வேண்டும். அச்சுப் பிழைத் தவறுதலை ஒப்புக்கொள்கின்றோம்.

**ஆனால் -**

நினைவுப் பேருரைக்குச் சென்றிருந்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினரான பேராசிரியருக்கு பல்கலைக்கழக மாணவர் எதிர்ப்புக் காட்டினார்கள்; அதனைப் பிரதிபலிக்கும் பொருட்டு பதாகைகள் கட்டினார்கள் என்பது உண்மையான சம்பவம்.

பேருரை நிகழ்விற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் செய்தியாளர், பேருரை முடிந்து வெளியே வந்தவேளை, பல்கலைக்கழக வளாகத்தின் நடைபாதையின் குறுக்கே இராமநாதன் மண்டபத்துக்கு முன்பாக கயிறு கட்டப்பட்டு அதில் பதாகைகள் தொங்கவிடப்பட்டதையும் மாணவர்கள் கூடி நின்றதையும் நேரில் கண்டார்.

அதனையே செய்தியாக, படங்களுடன் உதயன் பிரசுரித்திருந்தது. அது பொய்ப்பிரசாரமல்ல. அத்தகைய செயற்பாட்டில் உதயன் எப்போதும் ஈடுபட்டதில்லை.

**மேலும் -**

இது சம்பந்தமாக பேருரைக்கு சமுகமளித்திருந்த பல்கலைக்கழகப் பீடாதிபதி ஒருவரிடம் விசாரித்தவேளை, மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததும் பதாகைகளைக் கட்டியதும் உண்மைச் சம்பவங்களே என்று உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் இச்சம்பவம் குறித்துத் தெரிவிக்கையில் -

சம்பந்தப்பட்ட பேராசிரியர் நிகழ்வுக்கு வந்திருப்பது எமக்கு முன்னுக்குத் தெரியவரவில்லை. பின்னரே அறிந்தோம். மாமனிதரின் நிகழ்வுக்குப் பாதிப்பு வரக்கூடாது என்பதால், பேருரை நிறைவுபெற்றகையோடு எமது மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்கள் - என்று சொன்னார்.

பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மயில்வாகனன் சிவசூரியவிடம் விசாரித்தபோது பேருரை நிறைவுறுவதற்கு சற்று முன்னதாகவே தாம் வெளியே வந்துவிட்டதாகச் சொன்னார்.

துணைவேந்தர் சு.மோகனதாஸ் இச்சம்பவம் தொடர்பாக கருத்துக் கூறுகையில் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

மாமனிதர் அ.துரைராஜாவின் நினைவுப்பேருரை நிகழ்வு நடைபெற்று வெளியே வரும்போது, அந்த நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர் சாமுவேல் ரட்ணஜீவன் ஹேபேர்ட் கூலுக்கு எதிராக பதாகைகள் தாங்கியபடி மாணவர்கள் நடைபாதைக்கு குறுக்கே நின்றனர். எனினும் நான் எனது அலுவலகத்திற்குரிய பின்பக்கப்பாதை ஊடாக துணைவேந்தர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு எனது அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன். வீதிக்கு குறுக்கே மாணவர்கள் எதிர்ப்பைக் காட்டியதால் பேராசிரியர் கூல் எந்தப் பாதையால் வெளியேறினார் என்பது எனக்குத் தெரியாது - என்றார்.

**இளையோர் விளையாட்டு விழா பரிசளிப்புக் காட்சிகள் சில....**







படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்

# கருணாவுக்கு வழங்கும் பாதுகாப்பை அரசு உடன் வாபஸ் பெறவேண்டும்

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

கருணாவிற்கும் அவரது சகாக்களுக்கும் அளித்துவரும் பாதுகாப்பினை இலங்கை அரசு உடனடியாக விலக்கிக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் யாழ். பிரதான வீதியில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் கட்சித்தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இதில் கலந்துகொண்ட காங்கிரஸ் கட்சிப்பிரமுகர்கள் -

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைக்கும் நோக்கத்துடனேயே கருணா தரப்பினர் மட்டக்களப்பில் செயற்பட்டனர்.

கருணாவிற்கும் அவரது சகாக்களுக்கும் உதவிகள் செய்து அவர்களைப் பாதுகாப்பதை இலங்கை அரசும் ஏனைய கட்சிகளும் உடனடியாக நிறுத்தவேண்டும்.

அத்துடன், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தும் வகையில் மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடனடியாகத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் வழங்க ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - எனக் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனைச் சபை ஏற்றுக்கொண்டது.

இதற்கிடையில், தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்த சி.வி.கே. சிவஞானம், கலாநிதி க.குமரகுருபரன் ஆகியோரின் பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக் கொள்வதாக அறிவித்த கட்சியின் செயற்குழு, அவர்களின் இடங்களுக்கு முறையே வவுனியாவைச் சேர்ந்த எஸ்.சிவசிதம்பரம், கோப்பாயைச் சேர்ந்த இ.மயில்வாகனம் ஆகியோர் நியமனம் செய்யப்படுவதாக அறிவித்தது. (எ-6)

**கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு**

# 'புலிகளின் குரல்' வானொலியில் இன்று சிறப்பு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை5

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு புலிகளின் குரல் வானொலியில் இன்றையதினம் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இன்றுகாலை 6.30 மணி முதல் இரவு 10 மணி வரை நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன.

காலை 6.30 மணிக்குத் தேசியத்தலைவர் பிரபாகரனின் சிந்தனையும் அதனைத் தொடர்ந்து மாவீரர் வணக்கமும் இடம்பெறும். அடுத்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, கரும்புலிகள் குறித்துப் பகிர்ந்து கொள்வார்.

நிகழ்வுகளில் 9 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற்றல் இடம்பெறும்.

அவ்வேளையில் கொடிவணக்கப் பாடல் ஒலிபரப்புச் செய்யப்படும். அகவணக்கத்தை அடுத்து சிறப்பு நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு தொடரும்.

சிறப்பு நிகழ்ச்சிகளில் பிற்பகல் 3.30 மணிக்கு செய்திகளை அடுத்து விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி உரையாற்றுவார்.

இரவு 7.05 மணிக்கு கரும்புலி மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றப்படும்.

சிறப்பு ஒலிபரப்பு இரவு 10.00 மணிக்கு நிறைவு பெறும். (ஐ-9)

# எதிர்க்கட்சித் தலைவர்களுடன் சபாநாயகர் இன்று சந்திப்பு

கொழும்பு,ஜூலை5

நாடாளுமன்றத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற குழப்பகரமான நிகழ்வுகளை சீர் செய்து நாடாளுமன்ற அமர்வுகளை முறையாக நடத்துவது பற்றி ஆராய்வதற்காக எதிர்க்கட்சிகளின் தலைவர்களை சபாநாயகர் இன்று சந்திக்கவுள்ளார்.

கடந்த நாடாளுமன்ற அமர்வுகளின்போது இடம்பெற்ற விரும்பத்தகாத செயல்கள் மற்றும் குழப்பங்கள் இனிவரும் அமர்வுகளில் இடம்பெறாதிருக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார கலந்துரையாடுவார்.

இச்சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று காலை இடம்பெறும் என சபாநாயகரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

# உதயன்

## கரும்புலி தினம் இன்று

உலக நாடுகள் பலவற்றில் இடம்பெற்றுவரும் இன முரண்பாட்டுப் பிணக்குகள், உள்நாட்டுப் போர்கள் போன்றவற்றின் அடிப்படையாக அமைந்திருப்பது அடக்கு முறைதான்.

பொருளாதார அடக்குமுறை, இன அடக்குமுறை, நிற அடக்குமுறை, வர்க்க அடக்குமுறை என இது பல வகைப்பட்டாலும், அவை எல்லாவற்றுக்கும் கருவியாவது அதிகார, ஆயுத பலம்தான். அநேகமாக எண்ணிக்கையில் அதிகமான பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை - அல்லது அதிகார மற்றும் ஆயுத பலத்தில் வலுவானவர்கள் வலுக்குறைந்தவர்களை - அடக்கி ஆளும் கதைதான் தொடர்கின்றது.

இலங்கையிலும் நிலைமை அதுதான்.

எண்ணிக்கையிலும் அதிகாரத்திலும், ஆயுத மற்றும் வளப்பலத்திலும் விஞ்சி நிற்கும் பெரும்பான்மை இனம், பேரினவாத திமிரில் - வெறியில் - எண்ணிக்கையிலும் வலுவிலும் நலிந்த சிறுபான்மையினரை அடக்கி, அவர்களது உரிமைகளைப் பறித்து, தாயகத்தைக் கபளீகரம் செய்து, ஆதிக்க ஆட்சி புரிவதைத்தான் இங்கு நாம் காண்கின்றோம்.

இவ்வாறு எண்ணிக்கையிலும், ஆயுத பலத்திலும், வளவசதிகளிலும் மிஞ்சி நிற்கும் பேரினவாதத்துக்கு, விடுதலையும், உரிமையும், சுதந்திரமும் கோரும் சிறுபான்மையினர் முகங்கொடுத்துப் போராட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டுதான் தங்களின் போராட்ட யுத்திகளையும், தந்திரோபாயங்களையும் வகுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் சிறுபான்மையினர். இல்லையேல், மலையோடு மோதித் தாமாக அழிபவர்களாக - விளக்கில் விழும் விட்டில் பூச்சிகளாக - அவர்களும் அவர்களது போராட்டமும் மாய்ந்துபோகும்.

ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இந்த யதார்த்தத்தை மனதில் நிறுத்திக்கொண்டுதான் தனது விடுதலைப் போராட்டத்துக்குப் பாதையைச் செப்பனிட்டார்; வழிப்படுத்தினார்.

எண்ணிக்கையிலும், நவீன இராணுவ வசதிகள், தொழில்நுட்பத்திறன் ஆகியவற்றிலும் பருத்துப், பெருத்து இராட்சத வடிவில் மிஞ்சி நிற்கும் அடக்குமுறை ஆட்சியாளரை, குறைந்த எண்ணிக்கையினரான தனது சிறுபான்மை இனத்தவரை வைத்துக்கொண்டு, எதிர்கொண்டு போராட்டத்தை வெற்றிகரமாக வழிநடத்துவதற்கு அவருக்குப் புதிய போர் வடிவங்களும், யுத்த உத்திகளும் அவசியப்பட்டன. அதன்பொருட்டு அவர் வடித்த - வகுத்த - புதிய போர் வடிவமே கரும்புலித் தாக்குதலாகும்.

தமக்குக் குறைந்த உயிரிழப்புகளுடன் எதிரிக்கு அதிகளவு சேதத்தையும், அதிர்ச்சியையும், மனோபல வீழ்ச்சியையும், பாதிப்பையும் விளைவிக்கும் சக்தியும் உன்னத திறனும் மிகுந்த போர்வடிவந்தான் இது.

ஆனால், தங்கள் மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்காக - உரிமைகளுக்காக - இருப்புக்காக - தங்கள் உயிரையே தற்கொடையாகத் தரும் அகத்துணிச்சலும், ஆன்ம உறுதியும், மனத்திடமும், உள உத்வேகமும் - இவை அனைத்துக்கும் மேலாக ஈகமும் - கொண்ட போராளிகளின் அர்ப்பணிப்பு இதற்குத் தேவை.

அத்தகைய ஆயிரமாயிரம் போராளிகளை வடித்தெடுக்கும் சாதனை படைத்த தலைவர் பிரபாகரனினால் அத்தகைய உயிராயுதத்தை உற்பவிக்க முடிந்தது அதிசயமன்று.

அணு ஆயுதங்கள், நச்சு ஆயுதங்கள், பேரழிவு ஆயுதங்கள் என்ற தங்களின் வளத்தினாலும், பணத்தினாலும், பலத்தினாலும் பலவற்றைத் தயாரித்து, உலகையே ஆட்டிப்படைக்கும் வல்லரசுகள்கூட, இன்று உயிராயுதங்களின் பலத்தையும், அவை ஏற்படுத்தக்கூடிய சேதங்களின் ஆழ, அகல, அர்த்த பரிமாணங்களையும் கண்டு அதிர்ந்துபோய் நிற்கின்றன.

கரும்புலிகள் படையணியை வெற்றிகரமாகப் படைத்து, வழிநடத்தி, அதன் மூலம் உலகையே ஆச்சரியத்திலும் வியப்பிலும் மூழவைக்கும் பேராற்றல் ஒன்றை - போராற்றல் ஒற்றை - தலைவர் பிரபாகரன் யதார்த்தத்தில் நிகழ்த்திக் காட்டியபோது -

உலகெங்கும் அடக்கப்பட்ட மக்களுக்காகப் போராடும் சகல அமைப்புகளும், நிறுவனங்களும் இயக்கங்களும் அதைத் தங்கள் வழிகாட்டிக் கோட்பாடாகச் சுவீகரித்துக் கொண்டன.

தலைவர் பிரபா காட்டிய உயரிய வழியில் - உயர்ந்த நோக்கத்துக்காக - சீரிய எண்ணத்தோடு - நேர்த்தியான வழிமுறையில் - இந்த உயிராயுதத்தை அவை பயன்படுத்தவில்லை என்றாலும்கூட, உலக விடுதலை அமைப்புகளின் போரியல் வரலாற்றில் புதிய பரிமாணத்தை - பரிணாம வடிவத்தை - இந்த உயிராயுதக் கோட்பாடு புகுத்தியிருக்கின்றது என்பதும், விடுதலைப் போராட்டங்களின் எழுச்சிக்கும் விழிப்புக்கும் அது உத்வேகமளித்திருக்கின்றது என்பதும் மறுக்கமுடியாதவையாகும்.

அத்தகைய மகத்துவம் மிக்க கரும்புலிகளின் நாள்தான் இன்று.

கழுத்திலே நஞ்சையும், நெஞ்சிலே வெடிகுண்டையும், உள்ளத்திலே தாயகக் கனவையும் சுமந்த ஈகையாளர்கள் கரும்புலிகள். அவர்களின் தியாகம் உயர்ந்தது; உன்னதமானது சிறந்தது; தேசிய மீட்புக்காக உயிரைக் கொடுக்கத் துணிந்தவர்கள் அவர்கள். தாம் மரணித்துத் தம் இனத்தை வாழ்விக்கத் தாமாக முன்வந்த தியாகிகள்.

அவர்களின் உயர்ந்த ஈகத்தையும், அதன் நோக்கத்தையும் மனதில் இருத்துவதுதான் இன்றைய சிந்தனையாக அமையவேண்டும்.

# கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக மாற்றுக!

## தொழிற்கல்வி அமைச்சுச் செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை5

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியை அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்குக.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது சர்வதேச மாணவர் பேரவை.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவின் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்கு யாழ்ப்பாணம் வருகைதந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் அறிவுவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் தயானந்த எஸ்.விஜயசேகர சர்வதேச மாணவர் பேரவைக்கு விஜயம் செய்திருந்தார்.

தொழில்நுட்பக்கல்வி அமைச்சுச் செயலாளரின் வருகையை முன்னிட்டு மாணவர் பேரவையின் கேட்போர் கூடத்தில் சந்திப்பு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட மாணவர் தரப்புப் பிரதிநிதிகள் –

நவீன உலகில் தொழில்நுட்பக்கல்வி என்பது மிகவும் அவசியமானதொன்றாகும். இந்தவகையில், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியைத் தொழில்நுட்ப நிறுவனமாக மாற்றினால் வன்னிப் பகுதி மாணவர்கள் அதிக நன்மையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

அதேவேளை - கிளிநொச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல்பீடத்தினை நிறுவுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தனர்.

சமாதானச் சூழ்நிலை நிலவுகின்றபோதிலும், மக்கள் எதிர்நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகள், இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், இராணுவப் புலனாய்வுத்துறையினர் திட்டமிட்டு மேற்கொள்ளும் கலாசாரச் சீரழிவுகள் பற்றித் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு எடுத்துக்கூறப்பட்டதாக மாணவர் பேரவை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் பேரவையில் நடந்த இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ.செல்வக்குமார், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(எ-12)

# அதிகாரியின் கவனயீனமே தீ விபத்துக்குக் காரணமாம்!

## அரச அச்சகப் பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை5

அச்சகத்தில் ஏற்பட்ட தீ விபத்திற்கு அரச அதிகாரி ஒருவரின் கவனயீனமே காரணம்.

- இவ்வாறு தெரிவித்தார் அரச அச்சகத் திணைக்களப் பணிப்பாளர் நெவில நாணயக்கார. இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவிபத்துத் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. இதுதொடர்பான விசாரணை அறிக்கை இன்று கிடைக்கும்.

அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களமும், குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் இதுதொடர்பான விசாரணைகளை நடத்திவந்தன.

விசாரணையின் விவரங்கள் ஓரளவு கிடைத்துள்ள போதிலும், உத்தியோகபூர்வ அறிக்கை கிடைத்த பின்னரே எதுவும் கூறமுடியும்.

பொறுப்புவாய்ந்த அதிகாரி ஒருவரின் கவனயீனத்தால்தான் இந்தத் தீவிபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(4-6-13)

# இடைக்காடு மயானத்தைப் புனரமைக்கக் கோரிக்கை

இடைக்காடு, செம்மணி இந்து மயானத்தைப் புனரமைப்புச் செய்துதருமாறு இப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இராணுவப் பாதுகாப்பு வலயமாயிருந்த இந்த மயானப் பிரதேசம் கடந்த வருடம் இராணுவத்தினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்டுப் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டபோதிலும், இங்குள்ள மடங்கள் அழிந்துவிட்ட நிலையில் மாரிகாலங்களில் மழையில் நனைந்தவாறே தகனக்கிரியைகள் செய்யவேண்டியுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மயானத்திற்குச் செல்லும் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதால் இறந்த உடலை மயானத்திற்குக் கொண்டுசெல்லும்போது மிகுந்த சிரமப்படவேண்டியுள்ளது.

எமக்கு வேறு மயானம் இல்லை. இதனால் சேதமடைந்த மடத்தையும் வீதியையும் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(4-178)

# மருதங்கேணிக் கல்விக்கோட்ட கரும்புலிகள் தினப் போட்டி முடிவுகள்

வடமராட்சி கிழக்கு,ஜூலை5

கரும்புலிகள் தினத்தையொட்டி மருதங்கேணிக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையில் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பேச்சு, எழுச்சிப் பாடல் இசைத்தல் ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**பேச்சு:**

**பிரிவு 4ஆம், 5ஆம் தரங்கள்**

அ.அனந்தா - முதலாமிடம் (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை), டோ.கழப்பிரஷா - இரண்டாமிடம் (செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை), த.மயூரிகா - மூன்றாமிடம் (உடுத்துறை மகா வித்தியாலயம்).

**பிரிவு 6ஆம், 7ஆம் தரங்கள்**

ம.மேரிஸ்ரெலிக்கா - முதலாமிடம் (செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை), போ.பவுஸ்ரீனா - இரண்டாமிடம் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), எஸ்.ஜெயப்பிரசாந்தி - மூன்றாமிடம் (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை).

**பிரிவு 8ஆம், 9ஆம் தரங்கள்**

கெ.தினேஸ் - முதலாமிடம் (உடுத்துறை மகா வித்தியாலயம்), கி.றெஜிப்பிரியா - இரண்டாமிடம் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), சி.கலைமதி - மூன்றாமிடம் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை).

**எழுச்சிப் பாடல்கள்**

**பிரிவு 3ஆம் தரம்**

கெ.பிறின்ஸ்ரன் - முதலாமிடம் (செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை), அ.ஆர்த்தியா - இரண்டாமிடம் (மருதங்கேணி இ.த.க. பாடசாலை), ம.நிலானி - மூன்றாமிடம் (மாமுனை அ.த.க. பாடசாலை).

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் இன்று மருதங்கேணி கணேசானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் கரும்புலிகள் தினநிகழ்வில் வைத்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-182)

# காரைநகர் தியாகராஜா ம.வியின் பெயரை மாற்றக் கோரி தீர்மானம்

காரைநகர்,ஜூலை5

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மகா வித்தியாலயத்தை மீண்டும் காரைநகர் இந்துக் கல்லூரியாகப் பெயர் மாற்றம் செய்யவேண்டும் எனப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நூற்றாண்டில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்குடன் சயம்பு வாத்தியாரால் ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் இந்துக் கல்லூரிக்கு அங்கு அதிபராகக் கடமையாற்றிய கலாநிதி ஆ.தியாகராஜாவின் பெயரை 1983இல் சூட்டி இருந்தனர்.

எனினும், இப்பாடசாலையை ஸ்தாபித்தவருடைய நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மீண்டும் காரைநகர் இந்துக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் எனக் கூட்டத்தில் கலந்துகொண்ட பழைய மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்து மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுப் புதிய நிர்வாக சபையினால் இதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-73)

## நாளை

ஆனி 22
செவ்வாய்க்கிழமை
(06.07.2004)
திதி : சதுர்த்தி
பகல் 9.09 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
காலை 6.18 வரை.
சுபநேரம்: 10.28 - 11.58
ராகுகாலம்: 2.58 - 4.28
(பழைய நேரப்படி)

# சட்டத்தரணிகளுக்கு உதவி வழங்க நலன்பேணல் நிதியம் ஆரம்பம்

கொழும்பு,ஜூலை5

உதவி தேவைப்படும் சட்டத்தரணிகளுக்கு உதவுவதற்கென 'சட்டத்தரணிகள் நலன்பேணல் நிதியம்' என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி இக்ரம் முஹம்மட்டின் தலைமையில் இயங்கும் சட்டத் தோழமை அமைப்பு இந்த நிதியத்தை ஆரம்பிக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிதியத்தின் கீழ் சட்டத்தரணிகளுக்கு ஆண்டுதோறும் பத்தாயிரம் ரூபாவைத் தன்னிச்சையான உதவித் தொகையாக வழங்கவும் -

பாரிய நோய்த் தாக்கத்துக்கு உட்பட்ட சட்டத்தரணி ஒருவர் இறக்கும் சமயத்தில் அவரது குடும்பத்துக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்கவும் - உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-ரி)

## உதயவாக்கு

பணம், பதவி, பட்டத்தைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாதே மனிதா! மனிதம் உனக்குள் இருக்கிறதா ஆராய்ந்துபார்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: விள. இல. 2312, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (சி-35933)

## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். றோட், கோண்டாவில் மேற்கில் உபதபாற்கந்தோருக்கு அருகில் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நாதன் பவனம், K.K.S. றோட், கோண்டாவில். T.P.: 071 4803379. (33791)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, பாண்டியன் தாழவுப் பகுதியில் நான்கு பரப்புக்காணி நன்னீக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.60, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (33772)

## விற்பனைக்கு

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 07-07-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி; P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. T.P. No. 3529, 2867. (33760)

தரமான Prima Broiler, அதிவிசேட பேட்டுக்குஞ்சுகள் 05.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm (வட்டுக்கோட்டை)இலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33483)

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம்கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். K.சிவராஜா, 'ராஜவாசா' 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021-222-3408, 2574199. (33735)

## தவறிவிட்டது

NPGA 8823 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு 25.06.2004 அன்று கொடிகாமததுக்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.குகேந்திரராசா, 272A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P. No. 222 - 7625. (33793)

## வீதி பலத்த சேதம்

கோப்பாய்ச் சந்தியிலிருந்து கிருஷ்ணன் கோயில் சந்தி வரையிலான வீதி போக்குவரத்துச செய்யமுடியாதளவுக்குப் பலத்த சேதமுற்றுக் காணப்படுகின்றது. இந்த வீதியில் பாரிய குழிகள் ஏறபட்டுள்ளதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதாகப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. (எ-17)

## பிரதேச அபிவிருத்திக் குழு அமைப்பு

நீர்வேலிப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்கென பிரதேச அபிவிருத்திக் குழுவொன்று கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செயது வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பணிப்பின பெயரில் பிரதேச சபையின் செயலாளரால் உருவாக்கப்பட்ட இக்குழுவில் வட்டார ரீதியல் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு 21 உறுப்பினாகள் கொண்டகுழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு தமது பிரதேசத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (-4-178)

## மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியிலான மாபெரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி – 2004

வடமாகாண ரீதியில் நடத்தப்படும் இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் பின்வரும் இடங்களில் 10-07-2004இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

**1.துஷா**
**பல்மூக்குக் கண்ணாடி அகம்**
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**2.வளர்மதி சனசமூக நிலையம்**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

★ வெற்றிபெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பணப் பரிசில்களும் வழங்கப்படும்.

முதலாம் பரிசு 5000/=
இரண்டாம் பரிசு 3000/=
மூன்றாம் பரிசு 2000/=

- செயலாளர்,
வளர்மதி விளையாட்டுக் கழகம்.
(சி-36201) (26-14-16)

## 18ஆவது பிறந்தநாள் வாழ்த்து
## 05-07-2004
## செல்வன் யோகேஸ்வரநாதன் விஜேந்திரா



மிருசுவிலைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி யோகேஸ்வரநாதன் - உதயசந்திரிக்கா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**விஜேந்திரா**

தனது 18ஆவது பிறந்த நாளை இன்று (05-07-2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். விஜயை அன்பு அப்பா யோகேஸ்வரநாதன், அருமை அம்மா உதயசந்திரிக்கா, தங்கைமார்: நிரோசா, சுபா, நிவேதா, அன்புத் தம்பி கோகுலன், மிருசுவிலில் வசிக்கும் அப்பம்மா, அத்தைமார், மாமிமார், மாமாமார், மச்சாள்மார்கள்: தாட்சாயினி, சிவச்செல்வி, சிவமதி, மச்சான்மார், மருமக்கள்: சானுகா, கம்ஷிகா, மருமகன் சங்கீத், கோவிற்கடவையில் வசிக்கும் சித்திமார், சித்தப்பாமார் மற்றும் அன்பு நண்பர்கள் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று நன்மைகள் பலபெற்றுச் சீருஞ்சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென உளமார வாழ்த்துகின்றனர்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.
(சி-35964)(26-14-34)
தகவல்: தங்கைமார்,
கோவிற்கடவை.


## போட்டோ கொப்பி டோனர்

ஜப்பானில் தயாரிக்கப்பட்டது

Canon Equis
டோனர் ரூபா.550/= இருந்து

SHARP 1118
ரூபா.1650/=




சகலவிதமான போட்டோ கொப்பி மெஷின்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் பழுதுபார்த்தல். உத்தரவாதத்துடன் திருத்தி தரப்படும்.

MITA 1522/ 1556/ 1855/ 1556/ 1560/ 1205/ 1455
SHARP 1016/ 7800/ 7300/ 2014/ 2414/ 2022/ 2035/ 2030
KONICA 1015/ 1212/ 3035/ 2028
RICOH 3813/ 4015/ 4215/ 4418
XEROX 1025/ 5017/ 5816
CANON 1215/ 3025/ 3325/ 1010/ 2020/ 3020/ 6650/ 6016
TOSHIBA 1310/ 1550/ 1560/ 2060/ 1710
GESTETNER 2216/ 2316/ 2415/ 23012/ 27152/ 26222
CANON LBP 210 / 310 HP1100LASER JET TONER

நாடுபூராகவும் உள்ள விற்பனை பிரதிநிதிகளிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட EOP 21 டோனரை இறக்குமதி செய்து நாடுபூராகவும் விநியோகிக்கும் ஒரே முகவர்

## ஸ்டார்லைட் இலெக்ரோனிக்ஸ்

# 763, இரண்டாவது டிவிஷன், மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 2693655, 2681711 பக்ஸ்: 2681712



# கலாலயா

பயிற்சியகம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்.

## மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

**கேக் ஐஸிங்** - சகல விதமான ஐஸிங் மற்றும் மாச்சினி மலர்கள் (SUGAR CRAFTING)
**உணவுகள் தயாரித்தல்** - மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள் VEGETABLE CRAFTING செய்தல்
**கூந்தல் அலங்காரம்** - 20 விதமான கொண்டைகள் போடுதல்
**FABRIC PAINTING** - SAREE PAINTING, POT PAINTING, EMBOSS PAINTING கைக்குட்டை, கதிரை விரிப்புகளில் வர்ணந்திட்டுதல்.
☆ மேற்குறித்த பயிற்சிகள் 3 மாத காலம் நடை பெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
**உடை தயாரித்தல்** - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்.
**கைவேலை** - பேப்பர் அலங்காரம், SOFT TOYS, கழிவுத்துணி வேலை, றிபன் வேலை, முத்துமாலை கோர்த்தல், CRYSTAL வேலை.
**மலர்கள் செய்தல்** - கடதாசியிலும் துணிகளிலும் மலர்கள் செய்தல், மலர்ச் செண்டு (BOUQUET)செய்தல்.
மேற்குறித்த பயிற்சிகள் 6 மாதகாலம் நடைபெறும்.
இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் முறையும் 2 நாள் வகுப்புகளாக நடைபெறும்.

*கிழமைநாள் மற்றும் சனி – ஞாயிறு புதிய வகுப்புகளுக்கு மாணவிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.*

மேலும் விவரங்களை வியாழன். வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப. 1.30 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(சி35993) (24-14-26) - பதிவாளர்.


## பொதுசன நலன்புரி நிதியம்

தெல்லிப்பழை,ஜூலை5

வலி.வடக்கு பிரதேச சபையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பொதுசன நலன்புரி நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிதியத்திற்குப் பிரதேச சபை ஊழியர்கள் தங்களால் இயன்ற ளவு நிதியுதவியை மாதந்தோறும் வழங்கிவருவதாகப் பிரதேச சபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் தெரிவித்தார். கடந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிதியத்தின் மூலம் திரட்டப்படும் நிதி, பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஏதேனும் முக்கிய பாதிப்புக்கு உள்ளாகியிருககும் குடும்பமொன்றிற்கு அலலது நபரொருவருக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-150)

## இரவு மேற்பார்வையாளர்கள்

பத்திரிகை நிறுவனத்தில் இரவில் இயங்கும் பிரிவுகளின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும், ஒன்றிணைத்து விரைவுபடுத்துவதற்கும் முன் அனுபவமும கல்வித்தகுதியும் உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள், நிறைந்த உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், பணியாளர்களை நிர்வகிக்கும் திறமை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அச்சு இயந்திரங்கள் தொடர்பான ஓரளவு அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

யாழ். மாநகரசபைப்பகுதிக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் 07.07.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். (சி-35899)

**உதயன் மனிதவள சேவை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 15 - 05 - 1938



உதிர்வு 05 - 06 - 2004

**திருமதி ஐயாத்துரை இராசலட்சுமி**

அன்போடு பேசி ஆதரவாய் அரவணைத்து நல்ல பண்போடு வாழ்ந்து மறைந்த அன்புத் தெய்வமே! ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (05-07-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- சி.ஐயாத்துரை (கணவர்),
அ.அருள்நேசவாசன் (சகோதரன்)
குடும்பத்தினர்.

பூதர்வளவு,
அச்செழு.
(33782)(26-14)

## மரண அறிவித்தல்



**திருமதி போல் திரேசம்மா**

இளவாலையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட போல் திரேசம்மா அவர்கள் 30.06.2004 அன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை போலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தீமூத்து - ஆனாப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை - மரியப்பிள்ளையின் அன்பு மருமகளும் செல்வநாதன் (குணம் - ஜேர்மனி), அசெம்ரா றோகினி (புனிதா - ஜேர்மனி), அலோசியஸ் (ஜேர்மனி), பற்றீசியா ஜெயராணி (மலர் - ஜேர்மனி), யூட் (நியூட்டன் - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் டெய்சி, அந்தோனிப்பிள்ளை, மரீனா சந்திரகுமாரி, நித்தியேந்திரன் , டொமிற்றில்லா சாந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் துரைசிங்கம் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பீறறர்பிள்ளை, காலஞ்சென்ற யோசவ், அம்புறோஸ் (வவுனியா) ஆகியோரின் மைத்துனியும் கிறிஸ்ரா, யுலிற்றா, கிலௌடியா, அஜந்தன், அனுஷா, அலெக்ஸ், அன்ரனி, அமல்டன், ஆர்ற்ரன், ஹெலன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.07.2004) திங்கட்கிழமை இளவாலையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பி.ப.3.00 மணிக்குப் புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அக்கத்தனை,*
*இளவாலை.*
(33794)(34-14-26)
தகவல்:
மக்கள், மருமக்கள்.

# கிளிநொச்சியில் அபிவிருத்தியை முன்னெடுக்க "நீர்ப்" திட்டம் உதவி

கிளிநொச்சி,ஜூலை5

'நீர்ப்' திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதன்கீழ் ஒவ்வொன்றும் 10மில்லியன் ரூபா செலவில் 10இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவமாது விடுதி என்பன நிறுவப்படவிருக்கின்றன.

வன்னேரி, புலோப்பளை, தட்டுவான்தொட்டி, வட்டக்கச்சி, பூநகரி, கிளிநொச்சி உட்படப் 10 இடங்களில் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டதும் கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதார மருத்துவத் தேவைகள் ஓரளவு நிறைவு செய்யப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 5மில்லியன் ரூபா செலவில் சுகாதார வைத்தியப் பணிப்பாளர் விடுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி அரச செயலகத்தில் முப்பத்தேழு லட்சம் ரூபா செலவில் சுற்றுலாவிடுதி ஒன்றையும் 5.2மில்லியன் ரூபா செலவில் கட்டடத் திணைக்கள அலுவலகம் ஒன்றையும் அமைப்பதற்கு 'நீர்ப்' திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்கள் யாவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(-4)

## கண்டாவளையில் மரநடுகை

பரந்தன்,ஜூலை5

சூழல் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு கண்டாவளைப் பிரதேசத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நடப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மே[illegible]ாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரமந்தனாறு [illegible]ப்பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் [illegible]கிய இடங்களிலும் புளியம்பொக்கனை கமந[illegible] சேவை நிலையக் காணியிலும் இந்த மரக்க[illegible]ள் நடப்பட்டன.

கண்டாவளை காணி உத்தியோகத்தர் நமசிவாயம், கமக்கார அமைப்பினர், தேசிய எழுச்சிப் பேரவையினர் மற்றும் பெரும்பாக உத்தியோகத்தர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(-4-5-352)

# முருகானந்தா வித்தியாலய புதிய கட்டடம் திறந்துவைப்பு

பரந்தன்,ஜூலை5

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டுமாடிக் கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

புதிய கட்டடத்தினை நிக்கொட் பணிப்பாளர் ரி.லங்கா நேசன் நாடாவெட்டித் திறந்து வைத்தார். நினைவுக் கல்லினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியநாயகம் மற்றும் நிகொட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்கா நேசன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் வண.பிதா பிரான்ஸிஸ் அடிகளார் மற்றும் நிக்கொட் நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(4-5-352)

# தோண்டப்படும் கிணறுகள் தூர்ந்துபோகும் அவலம்!

## குடிதண்ணீருக்காக அல்லாடும் மக்கள்

ஒட்டுசுட்டான்,ஜூலை5

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள பெரிய சாளம்பன், சின்னச் சாளம்பன் கிராமங்களில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இப்பகுதிகளில் கோடைகாலங்களில் தோண்டப்படும் சிறிய கிணறுகள் அடிக்கடி தூர்ந்துபோகும்நிலை காணப்படுவதாகவும் இதனால் குடிதண்ணீரைப் பெறுவதற்கு அயல்கிராமங்களில் உள்ள பொதுக்கிணறுகளைத் தேடி அலையவேண்டியிருப்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமங்களில் 36குடும்பங்கள் கடந்த முப்பது வருடங்களாக வசிக்கின்றன. எனினும், இதுவரை அங்கு உருப்படியான பொதுக்கிணறு ஒன்றுகூட அமைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அன்றாடம் கூலித்தொழில் செய்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் குடிதண்ணீருக்காக மட்டுமல்ல சுகாதாரவசதி, போக்குவரத்து வசதிகளுக்காகக் கூட கிலோமீற்றர் கணக்கில் அலையவேண்டியிருக்கின்றது.

இந்த அவலநிலை நீக்கப்படாதா என்று மககள் மிகுந்த கவலையுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

(-4-341)

## குளத்தில் மூழ்கி சிறுமி மரணம்

கிளிநொச்சி,ஜூலை5

தருமபுரம், 4 ஆம் பகுதி குளத்திற்கு குளிக்கச் சென்ற தியாகராசா மிதுஷா என்ற 5 வயதுச் சிறுமி குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சிறுமி வழமையாக இந்தக் குளத்திற்கு குளிக்கச் செல்வதாகவும் அதேபோலவே சம்பவம் அன்றும் மாலை 5 மணிக்கு குளிக்கச் சென்று குளத்தில் மூழ்கி இறந்தார் என்று கூறப்பட்டது.

(-4-402)

# வன்னியில் கால்வாய்நோய் தீவிரம்; தடுப்பு மருந்துக்குத் தட்டுப்பாடு!

## ஆறுவீத மருந்தே அனுப்பிவைக்கப்பட்டது

ஒட்டுசுட்டான்,ஜூலை5

வன்னிப் பகுதியில் மாடுகளுக்கு கால்வாய்ப் புண்நோய் தீவிரமாகப் பரவிவருகிறது.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் கால்நடை சுகாதார வைத்தியப் பிரிவினரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இறைச்சிக்காக அனுமதியின்றி மாடுகளை வெட்டுவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்படும் மாடுகளை ஏனைய மாடுகளில் இருந்து விலக்கித் தனியான ஓர் இடத்தில் கட்டிப்பாதுகாக்குமாறும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாடுகளுக்குப் போதுமான தடுப்பு மருந்துகளே வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கால்வாய்ப் புண் நோய்க்கான மருந்தினைப் பெறுவதற்கென முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் கால்நடை சுகாதார வைத்தியப் பிரிவினர் அண்மையில் கொழும்புக்குச் சென்றிருந்தனர்.




இந்த நோய்க்கான தடுப்பு மருந்துக்கு வன்னியில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும கூறப்படுகின்றது.

சுமார் 10ஆயிரம் மாடுகளுக்கு இந்த நோய பரவக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனினும், கொழும்பிலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் 600

அங்கு 10ஆயிரம் மாடுகளுக்கு மேற்படி தடுப்பு மருந்து ஏற்றப்பட வேண்டியிருப்பதாக கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்களத்துக்குச் சுட்டிக்காட்டிய போதிலும் 600 மாடுகளுக்கான மருந்தே வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(-4-341)



கிளிநொச்சி ஊரியான் கிராமத்தில் அண்மையில் பன்னவேலைப் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பற்பநாதன் சுடர்ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் கிளிநொச்சி பனை அபிவிருத்திச்சபை இணைப்பாளர் ஏ.வி.கே. மாணிக்கம், ஊரியான் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் கிராம அலுவலர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: பரந்தன் செய்தியாளர்)

# வேகத்தைக் குறைத்துக்கொள்க!

ஒட்டுசுட்டான்,ஜூலை5

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வாகனங்களை வேகமாகச் செலுத்துவதால் தினமும் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன என்று கூறப்படுகின்றது.

நாட்டில் சமாதான சூழல் ஏற்பட்ட பின்னர் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் பிரதேசங்களுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து பெருமளவான வாகனங்கள் சென்று வருகின்றன. இந்த வாகனங்கள் வீதிகளில் அதிவேகமாகச் சீறிச் செல்கின்றன.

இதனால், பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் விபத்துக்கு உள்ளாக நேரிடுகின்றது.

இவ்வீதி சனநடமாட்டம் அதிகமாக இருப்பதால் இங்கு வாகனங்களை மெதுவாகச் செலுத்துமாறு அப்பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

(-4-7-341)

# பன்னங்கண்டி ஆற்றை ஆழமாக்கத் திட்டம்!

பரந்தன்,ஜூலை5

இரணை மடுக்குளத்திலிருந்து தொடங்கி ஆனையிறவு கடலேரியில் போய்ச்சேரும் பன்னங்கண்டி ஆற்றினை ஆழமாக்கிப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பன்னங்கண்டி ஆற்று நீர் கடலுக்குச் செல்வது தடைப்பட்டுள்ளதால் ஆற்றினை அண்மித்துள்ள கிராமம் மாரிகாலத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

அவர் இதனை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்குத் தெரியப்படுத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே இந்த ஆற்றினை ஆழமாக்கிப் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை அரச அதிபர் மேற்கொண்டிருக்கிறார் என்று கூறப்பட்டது.

அண்மையில் பன்னங்கண்டி ஆற்றுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட அரச அதிபர் அதன் புனரமைப்புக்கு உரிய வேலைத் திட்டத்தினைத் தயாரிக்குமாறு பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்தார்.

(-4-7-342)

# அகதிகள் தினத்தையொட்டி சைக்கிள் ஓட்டப்போட்டி

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு கடந்த 20 ஆம் திகதி யுனிசெவ் நிறுவனத்தினரால் கிளிநொச்சியில் ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடத்தப்பட்டன.

ஆண்களுக்கான போட்டி மல்லாவி மத்திய கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி மாங்குளம் சந்தி ஊடாக கிளிநொசசி முற்றவெளி மைதானத்தை வந்தடைந்தது.

பெண்களுக்கான போட்டி மாங்குளம் சந்தியில் ஆரம்பமாகி கிளிநொச்சி முற்றவெளி மைதானத்தை வந்தடைந்தது.

ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை ஜே.கொலின் பிரபாகரனும், இரண்டாம் இடத்தை ஏ.நாவிந்தனும் மூன்றாம் இடத்தை பி.பாலகுமாரனும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை டிலன்யா நிலுசிறியும் இரண்டாம் இடத்தை என்.லோயிகாவும் மூன்றாம் இடத்தை ஏ.பாமினியும் பெற்றுக்கொண்டனர். இவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சுமார் ஐம்பது போட்டியாளர்கள் வரை கலந்துகொண்ட ஆண்களுக்கான போட்டியில் பங்குபற்றிய - ஒரு காலை இழந்திருந்த போட்டியாளரான எம்.கிருபாகரன் என்பவர் 8 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவருக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.

(4-301-322)

## சிரமதானப் பணி

பூநகரி,ஜூலை5

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு பூநகரி நல்லூரில் தியாகி திலீபன் மருத்துவமனையில் கடந்த முதலாம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மாபெரும் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இச்சிரமதானப் பணியில் உழைக்கும் மகளிர் அமைப்பு, கமக்கார அமைப்பு, பூநகரி நல்லூர் ம.வி. மற்றும் பொது அமைப்புகள், அரசியல் துறையினர், பொதுமக்கள் எனப் பலதரப்பினர் கலந்துகொண்டனர்.

(-4-201)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 - 05 - 1976

உதிர்வு 05 - 07 - 2000



**மேஜர் வெங்கண்ணன்**

கனகலிங்கம் சசிகுமார்

*(சொக்கண்ணா)*

இவருடன் வீரச்சாவடைந்த மற்றவர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

தகவல்: பெற்றோர்.

பருத்தித்துறை. (சி-35965)(39-14-24)

## தென்மராட்சியில் குடிதண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை5

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரட்சியால் குடிதண்ணீப் பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்கு விரைவில் தொட்டிகள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

சமூக நலநோம்பு அமைச்சினால் மேற் கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கென அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினர் ஆறு பிளாஸ்ரிக் தண்ணீர்த் தொட்டிகளை வழங்கி யுள்ளனர்.

இந்தத் தொட்டிகள் பிரதேசத்தில் தண்ணீப் பற்றாக்குறையுள்ள ஆறு இடங்களில் வைக் கப்பட்டு பவுஷர் மூலம் தினமும் குடிதண்ணீர் வழங்கவென உழவு இயந்திரத்தினையும் தண் ணீப் பவுஷரையும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதேச செயலகத்திற்கு வழங் கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை யுள்ள கைதடிப் பிரிவில் கைதடிச் சந்தி, உவரி ஊரியான் பகுதிகளிலும் சாவகச்சேரி கோயில் குடியிருப்புப் பிரிவில் பெரியமாவடியிலும் நகரைச் சபைத் தொழிலாளர் விடுதிப் பகுதி யிலும் மீசாலை வடக்கு, தெருவோரம் பகுதி யிலும் பிளாஸ்ரிக் தொட்டிகள் வைக்கப்பட வுள்ளன. (எ-117)

## ஆயிரம் நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

குருநகர்,ஜூலை5

தென்மராட்சிப் பகுதியில் சுமார் ஆயிரம் நாய் களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ள தாக யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங் கள் தெரிவித்தன.

மேலும் விசர்நாய் கடித்துவிட்டால் பொது மக்களுக்கு ஏற்புத் தடை மருந்து யாழ் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதாரவைத் தியசாலை, சங்கானை சுற்றயல்கூறு வைத்திய சாலை ஆகியவற்றில் போதியளவு உள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் பொலீஸாரின் வசம்

கொழும்பு,ஜூலை5

தெற்கில் மாகாணசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட அரசுக்குச் சொந்தமான 15 வாகனங்களைப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

அரச வாகனங்கள் தேர்தல் பிரசார நட வடிக்கைக்குப் பயன்படுத்தப்படுவதாகப் பொலீஸா ருக்குக் கிடைத்திருந்த தகவல்களையடுத்தே இந்த வாகனங்கள் பொலீஸாரினால் கைப்பற் றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-6-13)

## நெடுந்தீவுக்கு டாக்டரை நியமிக்கக் கோரிக்கை

வலி. தென்மேற்கு,ஜூலை5

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணை யுடன் நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் டாக்டர் எஸ்.நதாலியலின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இப்பதவிக்குப் புதிய வைத்திய அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளரை யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப் பாளர் கடிதமூலம் கேட்டுள்ளார். (எ-135)

பல வர்ண சுவாமிப் பட அட்டைகளுடன் நினைவு மலர்களை நியாயமான விலையில் தரமாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான Offset Printing வேலைகளிற்கும் நாடுங்கள்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில்.
(33694) (24-14) T.P. No.: 222 6722

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலை ஆசிரியை திருமதி மகாலட்சுமி சிவபாதம் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி கந்தப்பிள்ளை மகேஸ்வரி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இன்றைய 31ஆம் நாள் நினைவில் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- பாடசாலைச் சமூகத்தினர்,
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
திருநெல்வேலி.

(33625)(39-14-24)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு 23 - 07 - 1976

வீரச்சாவு 05 - 07 - 2000



**கப்டன் இளங்குமணன்**

(அருமைத்துரை பிரகாஷ்)

குடும்பத்தின் முதல் பூத்த மலரே!
குடும்பத்திற்காய் தோள் கொடுப்பாய் என்றிருக்க
மண்ணின் விடிவிற்காய் மாவீரனாகி
நான்காண்டுகள் சென்றதையா!
கல்லறைக்குள் இருக்கும் கண்மணியே!
ஆண்டாண்டு பல சென்றாலும்
ஆறாது உன்நினைவு!

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

*கொற்றாவத்தை,*
*மலையந்தோட்டம், வல்வெட்டித்துறை,*

(33624)(39-14-24)

## நான்காம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 03 - 06 - 1953

மறைவு 20 - 06 - 2000



**அமரர் கந்தையா கருணானந்தன்** (இராசா)

திதி :- சங்கடஹர சதுர்த்தி

வந்த கடன் முடிந்ததென
விதி வழியே சென்ற தெய்வத்துக்கு
நான் வாய்க்கரிசி இட்டுத்
தனி வழிப்பயணம் அனுப்பி
சிறு பிள்ளையைக் கொண்டு
தீ மூட்டிய பாவியாகினேனோ நான்!
நீங்கள் போனஇடம் நான் வந்து சேரும் வரை
கவலையும் தீராது, கண்ணீரும் ஓயாதப்பா!

'சிவபதி'
தாவடி வடக்கு.

(33780)

துயருறும் :
அன்பு மனைவி. பிள்ளைகள்.

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 10 - 02 - 1933

அநியாய அழிப்பில் 04 - 07 - 1996



அமரர் **வல்லிபுரம் இராசரத்தினம்**

(ஓய்வுபெற்ற O.L.D.O. ஓவசியர்)

**திதி: 05-07-2004**


வீரசெங்குந்த மரபிலே பிறந்து. விண்ணும் மண்ணும் வீரன் என்று
சொல்லும் அளவில் வளர்ந்து. ஆறுபத்துமூன்று ஆண்டு பாரினில் பலரும்
போற்றும் பண்பாளனாய் விளங்கிய எமது அப்பாவே!
எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் 8 ஆனாலும்
ஆறவில்லை எம் மனம் எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணினோம். ஏன்தான் எம்மைவிட்டுக் காலன்
B.M.C. வெடிகுண்டுருவில் வந்து
பிரித்தானோ தெரியவில்லை? காலன் தான்
பிரித்தாலும் உங்கள் மீதுள்ள காதல் தான்
பிரியவில்லை. பிரியா அன்பெனும் பிணைப்பிலே
இணைந்து பிரிவு என்னும் சோகக் கடலிலே
மிதக்கவிட்டுக் கரைதெரியாத
கப்பல் போல் காலமெல்லாம் கண்ணீர்க் கடலிலே
மிதக்கவிட்டு போனீர்களே! மீதமுள்ள நாளெல்லாம்
மீண்டும் வருவீர் வருவீர் என்று இலவு காத்த
கிளிபோல் வழி மீது விழி வைத்துப் பார்த்தோம்
விழி வைத்த பக்கமெல்லாம் இலை மறைகாய்
போல் உன்முகம் தெரியுதப்பா! தெரியும் உன்
முகத்தைக் கட்டி முத்தமிட வந்தால் கானல் நீர்போல் மறையுதப்பா
மறைந்த உன் முகம் மண்ணில் தெரியும் காலம் வரும்வரை காத்திருக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கெனடி லேன்,*
*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*

(33783) (24-14)

## ஆறாம் மாத ஆறாத நினைவுகள்



அன்னை மடியில் 23.04.1978

ஆண்டவன் அடியில் 05.01.2004

**பாஸ்கரதேவன் ஜெயரஞ்சன்**

கனவிலும் தீமை கருதிடா உள்ளமே
உன்னை நினைவிலே நித்தமும் சேர்க்கின்றோம்
காலத்தால் உன்னை கணக்கிட்டான் காலன்
மரணத்தின் வாயிலும் மறக்கவா முடியும்?
உன் மழலைச் சிரிப்புடன் மலர்ந்த இதயத்தை
உன் திருமுகம் காண ஏங்குகின்றோம் நாம்
எங்கள் அன்பிற்காக எழுந்து வரமாட்டாயா?
ஆறு மாதமானதென்ன ஆறாயிரம் ஆண்டுகள்
ஆனாலும் தொட்டணைத்தாறும் உன்
பிரிவிழந்த நினைவுகள்.

உடுவில் கிழக்கு,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி.

- குடும்பத்தினர் -

## இசுசூ ஜேனி பஸ் விற்பனைக்கு

**GR XXXX (கஸ்ரம் ஜேனி பஸ்)**
**60 ஸ்ரீ XXXX (ஜேனி) தொடர் இலக்கங்களைக் கொண்ட கஸ்ரம் ஜேனி பஸ்கள் விற்பனைக்குண்டு.**

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
தி.ஸ்ரீதரன்
யாழ்ப்பாணம்,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
தொ.பே.இல.: 0777 - 110832

(சி-35995) (24-14)

# கரும்புலிகள் எனச் சென்றீர்: கண்டசும் எதிரி கலங்கிடவென்றீர்!

ஈழவரலாற்றில், யூலை-05

கரும்புலிகள் தினம் எம்மவர்களால் மட்டுமன்றி, சர்வதேச சமூகத்தினாலும் பெருத்த வியப்புடன் நோக்கப்பட்டுத் தொடர்ந்து பேசப்பட்டுவரும் நாள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தமது ஆருயிரை நன்கொடையாக ஆகுதியாக்கி, மாவீரராகிய காவிய நாயகர்களாம் கரும்புலிகளின் நினைவைப் போற்றும் நாள் இது.

வசந்தன் என்ற இயற்பெயரையுடைய கரும்புலி மில்லர் தனது முதலாவது தற்கொடைத் தாக்குதல் மூலம் ஈழவரலாற்றில் தற்கொடைத் தாக்குதலுக்கு அர்த்தம் கற்பித்து கரும்புலிகள் தசாப்தத்தை ஆரம்பித்துவைத்த நாள் - 1987ஆம் ஆண்டு யூலை 5ஆம் திகதியாகும்.

1987ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தனா அரசினால் வடமராட்சியில் முன்னெடுக்கப்பட்ட 'ஒபரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையின்போது வடமராட்சி மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். அவ்வேளை, இலங்கை இராணுவத்தினர் வடமராட்சியைக் கைப்பற்றித் தமது தற்காலிக வெற்றியைக் கொண்டாடியதுடன், நெல்லியடி மகாவித்தியாலயத்தில் தமது அடுத்த தாக்குதலுக்காகத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டும் இருந்தனர்.

விடுதலைப் புலிப்போராளிகள் இராணுவ எண்ணிக்கையில் பலவீனமடைந்திருந்த அன்றைய காலகட்டத்தில் மிகக் குறைந்த உயிர்த்தியாகத்துடன் நெல்லியடியில் இருந்த முகாமைத் தாக்கிப் படையினருக்கு பாரிய சேதத்தை விளைவிக்கவேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இதன்போதுதான் தற்கொடைத் தாக்குதல் பற்றிய எண்ணக்கரு அவர்களின் எண்ணத்தில் முகிழ்த்தது.

இதன் விளைவாக, கரும்புலி மில்லர் முன்வந்து முதன்முதலாக தற்கொலைத்தாக்குதலை நடத்தி நெல்லியடி மகாவித்தியாலய முகாமைச் சின்னாபின்னமாக்கினார். அத்துடன் படையினருக்குப் பாரிய அழிவுகளையும் ஏற்படுத்தி வரலாற்றில் அழியாத காவியமானார்.

இதன்மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கை அரசு ஒப்பந்தம் மூலம் இந்தியாவிடம் மண்டியிட்டு நிற்கவேண்டியநிலை ஏற்பட்டது.

இவ்வாறு மில்லர் தாக்குதல் நடத்திய அன்றைய தினம் கரும்புலிகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. மில்லர் வழியில் லெப்.கேணல் போர்க், மேஜர் டாம்போ, மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ், கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் போன்ற பல நூற்றுக்கணக்கான வீரவேங்கைகள் தொடர்ந்து தாயகத்துக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர்.

இவ்வாறு தரையில் இராணுவத்தினரின் செயற்பாடுகளை ஒடுக்குவதுடன் மட்டுமன்றி கடலிலும் கடற்படையினரின் நடமாட்டத்தையும் மேலாதிக்கத்தையும் சுதந்திர நடவடிக்கைகளையும் ஒடுக்கும் நோக்கில் கடற்புலிகளாகவும் இவர்களில் ஒரு பிரிவினர் தம்மை அர்ப்பணித்துக்கொண்டனர்.

இப்போரை எல்லாம் ஆண்கள் மட்டும் நிகழ்த்தவில்லை மாறாக, மேஜர் அங்கயற்கண்ணி கப்டன் நளாயினி, மேஜர். யாழினி போன்ற பெண் கரும்புலிகளும் கூட ஆண்களுடன் இணைந்தும், தனியாகவும் இத்தகைய தாக்குதல்களை வெற்றிகரமாக மேற்கொண்டு, ஆண்கள் மட்டும் அல்ல பெண்களும் விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் வரலாற்றில் எடுத்துக்காட்டத்தக்கவர்களே என்பதை நிலைநிறுத்தியுள்ளனர்.

"அம்மா!, நான் இயக்க வேலையாக ஓர் இடத்திற்கு போக இருக்கிறேன். இது முக்கிய வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது - அது நாட்டுக்கு மட்டும் தான் என்ற கப்டன் கொலின்ஸின் வீரவார்த்தையும், மன்னாரில் நடக்கின்ற கரும்புலித் தாக்குதலை நான் தான் செய்யவேணும். நான் திரும்பி வரமாட்டன். என்னால முடிந்த அளவுக்கு உள்ளே சென்று முகாமின் சுவரோடு மோதுவதுதான் எனது நோக்கம் என்ற மேஜர் டாம்போவின் கூற்றும் -

மாங்குளம் முகாம் பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். எனவே, நான்தான் சக்கை லொறி கொண்டு போகவேணும். நான் புறப்படுறன். இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது என்ற லெப். கேணல் போர்க்கின் வீர வார்த்தைக் கணைகளும்.

கரும்புலிகளின் வீரம், தற்துணிவு, தன்னம்பிக்கை, எல்லாவற்றுக்கும் மேலாக தாயகம் மீது கொண்ட தணியாத தாகம் என்பவற்றை பிரதிபலிப்பதற்குரிய சான்றுகளாக அமைந்துள்ளன. அவர்கள் இவ்வாறு கூறியதுடன் மட்டும் நின்றுவிடாது அவற்றைக் சாதித்தும் காட்டினார்கள் என்பது கண்கூடு.

தானுண்டு தன் குடும்பமுண்டு என எத்தனையோ மனிதர்கள் சுயநலத்துடன் தமிழீழத்தில் காலம் கழிக்க, மரணம் என்பது மானிடனுக்கு எப்போதும் வரலாம் என்ற பாரம்பரிய கருத்தை மாற்றி தமது மரணத்தை தாமே நிர்ணயித்து, தாய் நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்துப் பெரும் சாதனைகள் மூலம் பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்த இம்மாவீரர்கள் உலக இராணுவ வரலாற்றில் மாபெரும் சக்திகளாக வர்ணிக்கப்படக் கூடியவர்களென்பது மிகையன்று. இவற்றையெல்லாம் அவர்கள் செய்தது எதற்காக? நாள்தோறும், அன்னியரின் பிடிக்குள் அடிமை விலங்குகளாக வாழவேண்டியிருந்த தமிழர்களின் தலைவிதியைக் கண்டு, அதனை மாற்றித் தமிழர் தம் அடிமை விலங்கை உடைப்பதற்காகச் சீறியெழுந்து தற்கொடை மூலம் தமது இன்னுயிரை அர்ப்பணமாக்கியவர்கள் - அதற்காகத் தரையிலும், கடலிலும் சமர்புரிந்து சரித்திரம் படைத்த காவியநாயகர்கள் இவர்கள் என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும்.

இன்றைய இனப்பிரச்சினை சூழலிலும் நாம் உயிருடன் வாழ்ந்து கொண்டு இருப்பதற்கு அடித்தளமிட்டுக் கொடுத்த தியாகிகள்-தமிழீழத்தின் காவலர்கள் தமிழன் என்று சொல்லடா; தலைநிமிர்ந்து நில்லடா என்பதற்கமைய வாழ்வு காட்டிய தன்மான வீரர்கள். இவர்களுடைய நினைவுகள் என்றும் அகற்றப்படக் கூடாதவை.

தமிழீழத் தாயகம் ஒன்றையே தமது தணியாத தாகமாகக்கொண்டு சோதனை தாண்டிச், சாதனை படைத்து தமிழினம் காத்த இம் மாவீரர்களை நாம் எமது உயிர் உள்ளவரை மறக்காதிருப்போமாக.

**சாம்பவி**

# தடை தகர்க்கும் உயிராயுதங்கள்

யூலை - 05,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொற்தூரிகை கொண்டு எழுதிய நாள் இது. அந்த நாள்தான் கரும்புலிகளை நினைவு கூருவதற்காக கரும்புலிகள் தினமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரகடனப் படுத்தப்பட்ட நாள். முதல் கரும்புலி கப்டன மில்லர் வீரச்சாவு அடைந்த தினமும் அதுவே.

இனவாதப் பேய்களால் எமது நிலம் ஆக்கிரமிக்கப்படுவதையும் தமிழினம் அடிமைகளாக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டதையும் தமிழர் உயிர் பறித்துக் கோர வெற்றியாட்டம் போட்டதையும் கண்டு பொறுக்க முடியாது வெகுண்டெழுந்தவர்கள் இந்த கரும்புலி மாவீரர்கள்.

வீரமுடன் விவேகம் படைத்தவர்கள் புலிவீரர்கள். அதிலும் வேகமுடன் முன்னேறி விரைந்து தாக்கும் வல்லமை கொண்டவர்கள் கரும்புலிகள்.

கழுத்திலே நஞ்சும், நெஞ்சிலே வெடிகுண்டையும் சுமந்தவர்கள். தாயகக் கனவோடு எங்கள் தேச முற்றத்தில் மல்லிகையாய் பூத்துக் குலுங்கியவர்கள். ஊரோடு உறவாடி மக்களோடு மக்களாக உலாவந்தவர்கள்.

கரும்புலிகள் தேசியத் தலைவரின் வழியிலே தடம்பதித்தவர்கள். தேசியத்தின் மீட்புக்காய் உயிர் கொடுத்தவர்கள், உயிர்கொடுக்கத் துணிந்தவர்கள், தலைவரின் ஆணையை சிரம் மேற்சுமந்து விடியலுக்காய் உயிராயுதமானவர்கள்.

இவர்களது தியாகம் சிறப்பானது; உன்னதமானது. தமிழீழ மக்களது நெஞ்சை உருக்கும், உயிரைப் பிழியும் சக்தி வாய்ந்தது. எதிரியைக் கலங்கடிக்கும், சிதறடிக்கும் வல்லமை கொண்டது.

எதிரியினது படைபலத்தையும், மன பலத்தையும் பொடிப் பொடியாக்கும் விடுதலைப்பாதையின் தடைக்கற்களை தகர்த்தெறியும். இவர்களைக் கண்டால் கல்லும் முள்ளும் கனிந்து வழிவிடும்.

உலகில் கரும்புலிகள் என்னும் நாமம் தமிழீழ மக்கள் மனத்திலேயே முதலில் இடம் பிடித்தது. தமிழ் மக்களில் இருந்து ஒவ்வொருவராய் மலர்ந்தவர்கள்தான் கரும்புலிகள் என்று சொன்னால் மிகையாகாது. இதைவிட இன்னொரு செய்தி எமது விடுதலைப் போராட்டத்திற்கு அச்சுறுத்தல் விடுத்தும், வி[illegible]தலை நோக்கிய எமது பாதையில் [illegible]களைப் போட்டு குறுக்கே நிற்கும் [illegible]வ பலம் கொண்ட வல்லரசுகளும் பீதியடைவது எங்கள் கரும்புலிகளுக்குத்தான்.

தமிழ் மக்களோ புலிகளோ வலிந்து இன்னொருவன் மீது போர் தொடுக்கும் யுத்த வெறியர்கள் அல்லர். பறிக்கப்பட்ட எமது உரிமைகளை, அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக இனவாதக் குன்றுகளைத் துப்புகின்ற சுடுகுழல்களை நோக்கியதே இந்தப்போராட்டம்.

கரும்புலிகள் தரை, கடல், தளங்களில் பாய்ந்து வெடித்தவர்கள். இனிவரும் காலங்களில் விண்ணிலும வான் கரும்புலிகளாக பாய்ந்து வெடிப்பார்கள். இதுவரை தரை, கடல் கரும புலிகளாக மொத்தம் 262 பேர் வீரச்சாவடைந்துள்ளனர்.

இவர்கள் தமிழ் அன்னையிடம் இருந்தும் அண்ணனிடம் இருந்தும் விடைபெறும் கணங்கள் துயரத்தில் ஆழ்த்தும். ஆனால், அவர்களிடம் மண் விடுதலை பெறும் அந்த நாளைப் பார்கமுடியாதே என்ற கவலையைத் தவிர வேறெந்த மாற்றத்தையும் காணமுடியாது. ஆடுவார்கள், பாடுவார்கள, துள்ளிக் குதிப்பார்கள் சக போராளிகளிடம் தமக்கு கிடைத்த வாய்ப்பைச் சொல்லி சந்தோசிப்பார்கள்.

இறுதிக்கணத்தில் சிறு புன்னகை சின்னதொரு கையசைப்பு வெடியோசைக்கு முன்பதாக வெற்றி மந்திரமான *"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"* என்ற வார்த்தைகள் காற்றோடு கலந்து கனம் பரவும் வெற்றிச் செய்தி வெடியோசையுடன் கலந்து வரும் காற்று கரும்புலிகளின் புகழ் பாடும். ★

**சுதேசிகன்**

## யாரிற்கு வருமுங்கள் துணிவு?!

*யாரிற்கு வருமிந்தத் துணிவு? – வேறு*
*யாரிற்கு வருமிந்தத் துணிவு?*
*யாக்கை வெடித்திட யாதும் துடித்திட*
*யாகங்கள் செய்திடும் கனிவு – தமிழ்*
*தாகங்கள் தீர்த்திடும் பணிவு? – அட (யாரிற்கு)*

*காற்றில் கலந்திடும் கந்தக நெடியும்*
*கல்லறை வாடையை வீசும்*
*தூற்றித் திரையள்ளித் துள்ளிடும் கடலும்*
*தூலத்தின் பெருமையைப் பேசும் – உடல்*
*தூளினை கரையள்ளி – பூசும்! அட (யாரிற்கு)*

*சுட்டிப் பயலெறிந்த குட்டிக்கல் பட்டிங்கே*
*சுண்டித்தான் போனதெங்கள் தேகம் – உடல்*
*சட்டையெனச் "சக்கை"யினைச் சாத்தித்தான் போனீரே*
*சரித்திரம் ஆனதும் ஈகம் – கண்டு*
*சிலிர்த்தது உலகெட்டுப் பாகம்! – அட (யாரிற்கு)*

*நெல்லி யடிதன்னில் மில்லரொரு தீமூட்டி*
*நீட்டி வளர்த்தானே வீரம் – கரும்*
*கல்லின் விழிமீதும் கண்ணீரைக் காட்டியது*
*கரும்புலி தியாகத்தின் காரம் – அவர்*
*கனவினிக் கலையாது யாரும்! – அட (யாரிற்கு)*

*- அனலையூர்ச் சேந்தன்.*

## கரும்புலிகள் நாள் யூலை - 05



## இமயம் கூட.....

தாயின் மடியில் இனிதே பிறந்து
தலைவனின் மடியில் செழிப்புற வளர்ந்து
தமிழ்மொழி காத்திட தன்னுயிர் ஈந்த
தரணியே போற்றும் கரும்புலி வீரரே
கடலுடன் கடலாய் கணத்தினில் கரைந்து
காற்றுடன் காற்றாய் இருளினில் கலந்து
அலையுடன் அலையாய் எதிரியில் மோதி
அழித்த பின் அடங்கிய கரும்புலி வீரரே
தலைவன் காட்டிய வழியினில் சென்று
தடைகளைத் தகர்த்து சமரினை வென்றீர்
மண்ணும் விண்ணும் அழியும் மட்டும்
மனதினில் உங்கள் நினைவுகள் அழியா
ஆட்டம் போடும் கயவர் கூட்டம்
ஆடி பிறந்தால் அடங்கியே நடுங்கும்
ஈழத்தில் உங்கள் வீரம் கண்டு
இமயம் கூட சிறுத்தே போகும்.

*- பாசையூர் ஏ.விஜயன்.*

## உடலினை வெடியாக்கி உயிர் நீத்த தெய்வங்கள்!

காலத்தால் அழியாத
காவிய நாயகர்கள்
கன்னித் தமிழ்த்தாயின்
கடமை வீரர்கள்
கடலிலும், தரையிலும்
கடும் சமர்க்களத்திலும்
உடலினை வெடியாக்கி
உயிர் நீத்த தெய்வங்கள்!

- ஆழியூர் சீ.ஏ.யசீகரன்.

## காலத்தால் அழியாத காவிய நாயகர்கள்

இவர்கள் எங்கள் வீட்டுப்பிள்ளைகள்
என்றால் இவர்கள்
எம்முடனே நின்றவர்கள்
காத்தல் தொழிலைச் செய்துவந்த
எம் கண்கண்ட தெய்வங்கள்
எம் விழிகளால் தரிசித்த
விஷ்ணு பிரான்கள்
காலம் அழிந்தாலும்
காலத்[illegible] அழியாத
காவிய நாயகர்கள்.
புதுக்கவி

## நான்காம் ஆண்டு நினைவு தினம்

இலங்கையில் மலர்வு 05 - 12 - 1980



இந்தியாவில் உதிர்வு 20 - 06 - 2000

### செல்வன் பாலசுப்பிரமணியம் கோபிநாத்

(விஞ்ஞானப்பிரிவு மாணவன், யாழ். இந்துக்கல்லூரி – வேலணை 4)

திதி: சதுர்த்தி 05-07-2004

உன் அறிவும் அன்பு மொழியும்
புன்னகை முகமும்
என்றும் நெஞ்சிலே
அழியாத கவிதையாக
என்றும் உன் நினைவுடன்....
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

தகவல்: இ.பாலசுப்பிரமணியம்,
வேலணை கிழக்கு, வேலணை-4.

- குடும்பத்தினர்.

(சி-36206)(26-14-34-16)

## மரண அறிவித்தல்



### சுப்பர் செல்லத்துரை

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

துவாளிவீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த சுப்பர் செல்லத்துரை 01.07.2004 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - சின்னம்மாவின் மகனும் செல்லையா - பூமணியின் மருமகனும் திருமதி சற்குணதேவியின் அன்புக் கணவரும் சுதர்சன் (சுவிஸ்), கோபிநாத் (ஆஸ்திரேலியா), வசீகரன், ஜினேந்ததாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சினி (சுவிஸ்), நவீனா (ஆஸ்திரேலியா), துசிதா ஆகியோரின் மாமனாரும சர்மிலன், கிரிசானி ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னமணி, முத்தாச்சி, பொன்னம்மா, காலஞ்சென்ற அன்னம்மா, தங்கம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சதாசிவம், சேனாதிராசா (கொழும்பு), செல்வராசா, சற்குணராசா (சுவிஸ்), துரைராசா (கனடா), செல்வமணி (ஆஸ்திரேலியா), கமலாதேவி (மல்லி-கொழும்பு), ரஞ்சிதமணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2004) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*துவாளி வீதி, உடுப்பிட்டி.*
*Van No:58-9023*
தொ.பே.இல.021 2263362, 0777 410734.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(33789)(34-16-14)

### வடமராட்சியில் பணவரவு சீசன்!

கரவெட்டி,ஜூலை5

வடமராட்சியில் பணம் சேகரிக்கும் விழாவான "பணவரவு"வுக் கொண்டாட்டங்கள் தற்போது களைகட்டத் தொடங்கியிருக்கின்றன.

முன்பு நூறு ரூபாகள என்று செலுத்தப்பட்டுவந்த பணத் தொகைகள் தற்போது ஆயிரம் ரூபாக்களாக செலுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (4-70)

### வணிகருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை5

கரும்புலிகள் தினமான இன்று சகல வர்த்தக நிலையங்களையும் மாலை 4 மணியுடன் மூடி கருமபுலிகள் தின நிகழ்வுகளில் சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.(4-12)

### நியமனம்

குருநகர்,ஜூலை5

அருள்திரு.ஆர். அன்ரன் மத்தாயஸ் அடிகளார் கொழும்புத்துறைப் பங்கிற்கும, வண.பிதா பீற்றர் துரைரட்ணம் அடிகளார் நாரந்தனைப் பங்கிற்கும், அருள்திரு. ஜே.பி.ஜோதிநாதன் அடிகளார் அச்சுவேலி பங்கிற்கும் -

அருள்திரு.ஆர். ஸ்ரலின் அடிகளார் பாஷையூர் பங்கிற்கும் இறைபணியாற்ற யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். (எ-5)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் குலசேகரம் தேவராசா

அன்னையின் மடியில் 25.12.1926 — ஆண்டவனின் அடியில் 22.05.2004

அழகான உருவங்கள் மறையலாம்
அன்பான உருவங்கள் ஒரு போதும் மறைவதில்லை
கைகால் செயலிழந்தாலும்
மூளைத்திறன் இழக்காது வாழ்வு வாழ்ந்தீர்கள்
பாச உணர்வொன்று சுடர்விட்டுப் பறந்ததே
எம் குடும்பம் தேற்றுவார் இன்றிக் கலங்குகிறது.

*மானிப்பாய் றோட், உடுவில்.*

(சி33786)(34-16-14)

மனைவி, பிள்ளைகள்.

## வேலணை பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் எமது சபையால் கோரப்படுகின்றன.

| இல. | வேலை விவரம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப்படமாட்டாது) |
|---|---|---|---|
| 01. | இராசையா வீதி வேலணை | 5,000/= | 750/= (வற் உள்ளடங்கலாக) |

1) கேள்விப் படிவங்களினை 06.07.2004 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 20.07.2004 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணவரை அட்டவணையில் உள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
2) கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு *"செயலாளர், வேலணை பிரதேசசபை"* என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 21.07.2004 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முனபாகச் சமர்ப்பித்தல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்பக்க மூலையல் வேலை விவரத்தினை எழுதுதல்வேண்டும்.
3) கேள்விகள் 21.07.2004 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் சமுகமளிக்கவேண்டும்.
4) கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
5) மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செல்லப்பா சண்முகராசா (ஜே.பி.)
செயலாளர், வேலணை பிரதேச சபை.

(சி-35960)(34-14-16)


HND
Delivered Locally Recognised Globally

Edexcel International, UK

BTEC HND
World Class Qualifications

HND Leads to BSc. (Hon.)

Delivered Locally....... Recognised Globally

**New Batch Starts on 14.07.2004 at 10.00 a.m.**

**கணணித்துறையில் பட்டப்படிப்பு**

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினை தொடரமுடிம்..

**சர்வதேச சான்றிதழ்கள்**

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் Edexcel இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். Edexcel என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்**

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதாரரீதியாக நன்மை அடையமுடியும்

**தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்**

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது,

மேலதிக விபரங்களுக்கு 021 – 2222831 ∴ 021 – 2226933 அல்லது இல.100, மணிக்கூட்டுக்கோபுர வீதி, அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்

**Institute of Informatics Studies ( IIS )**

" An Edexcel Approved Training Centre"

100, Clock Tower Road, Jaffna
Email: iis@sltnet.lk T.P No: 021 222 2831 / 021 2226933

# நவீன நாடகங்கள் - ஒரு பார்வை

இன்று எங்கள் மத்தியில் பெரு வழக்காய் இருக்கின்ற வசன நடை நாடகங்கள் அன்று இருக்கவில்லை. அவை ஆங்கிலமொழி வாயி லாகத் தமிழுக்கு வந்த கலைச்செல்வங்கள்.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக நாட்டுக் கூத்துக்களே ஆடிக்கொண்டிருந்தனர். சிலர் இசை நாடகங்கள் நடித்தனர். அவையும் எப் பொழுதாவது தான் நடக்கும்.

**நவீன நாடகம் என்றால் என்ன?**

நாங்கள் வாழுகின்ற இந்த வாழ்க் கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களே யதார்த்த நாடகங்கள் (REALIS TIC PLAYS) எனப்படு கின்றன. சமகால வாழ்க்கையைச் சித்திரிப்பத னால் மட்டும் ஒரு நாடகம் யதார்த்தநாடகம் ஆகிவிடாது. சமூகத்தில் நாம் சந்தித்துப் பேசிப் பழகுகின்ற மனிதர்களே அவற்றில் பாத்திரங் களாக வந்து, தமக்கே உரிய பேச்சு வழக்கு மொழியில் உரையாடி, சமூகத்தின் பிரச்சினை தளையே அலசவேண்டும்.

தமிழ் மொழியில் இந்த வகை நாடகங் களை இயல்பு நாடகங்கள், மண்வாசனை நாடகங்கள் என்று பல பெயர்களால் அழைப் பர். நவீன நாடகங்கள் (MODERN DRAMA) என்பதும் இதுதான்.

இயல்பு நாடகங்களால் தான் மக்களுக்கு அதிக பயன் என்று கூறி, நோர்வே நாட்டவரான ஹென்றிக் இப்சன்தான் உலகில் முதன்முத லாக அந்தவகை நாடகங்களை எழுதி நடித் துக்காட்டினார்.

மஹாகவி ஷேக்ஸ்பியரது நாடகங்களைப் பின்பற்றி மேற்கத்தேய பாணியில் முதன்முதலாக மனோன் மணியம என்ற கவிதை நாடகத்தை எழுதியமைக்காக பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பெரிதும் பாராட்டப்படுகிறார்.

அது யதார்த்த நாடகமன்று; இரவல் கதை. சேர, சோழ, பாண்டியர் காலத்தை பின்ன ணியாகக் கொண்டது; மேடையில் நடிக்கமுடி யாதது. பின்வந்தவர்கள் பல மாற்றங்கள் செய்தே அதை நடித்தனர்.

தென்னிந்தியப் பேச்சுவழக்கு தமிழில் முதன்முதலாக நாடகங்களை எழுதி நடித்த வர் பம்பல் சம்பந்தமுதலியாராவார். துரதிர்ஷ்ட வசமாக அவர் எழுதிய - நடித்த சமூக நாடகங் கள் ஒன்றும் எமக்கு இன்று கிடைக்கவில்லை.

**பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள்**

இலங்கையில் முதன் முதலாக யதார்த்த நாடகங்களை எழுதிய பெருமை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையையேசாரும். தான் வாழ்ந்து கொண்டிருந்த யாழ்ப்பாணத்துச் சமூ கத்தை சித்திரிக்கும் நாடகங்களை, யாழ்ப் பாணப் பேச்சுவழக்குத் தமிழில் எழுதி, ஈழத் தின் நவீன தமிழ் நாடக வளர்ச்சிக்கு அடி யெடுத்துக் கொடுத்ததுடன், அந்தப் பேச்சுவழக் குத் தமிழுக்கு ஓர் இலக்கிய அந்தஸ்தும் பெற்றுக்கொடுத்தார்.

அதன்பிறகே ஏனையோரும் மெல்ல மெல்ல பேச்சுவழக்குத் தமிழில் நாடகம் எழுதத் தொடங்கினர்.

**கிண்டலும் எதிர்ப்பும்**

பேராசிரியரது மொழி நடையை மட்டுமல் லாது, அவரது நாடகங்களையே அந்தக்காலத் தமிழ் அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளத்தயங்கி னர். நாட்டுக்கூத்துக்களுக்கும் தென்னிந்தியப் பேச்சு வழக்கு நாடகங்கள், கதைகளுக்குப் பழக்கப்பட்ட பொதுமக்கள், அவரது 'மண்வா சனை நாடகங்களை' ஒரு புதுமையுடன் பார்தத்னர்.

பாவம்! அவர்களையும் குறை சொல்லக்கூ டாது, அந்தக் காலத்தில புராண, இதிகாசக் கதைகளைத் தானே சினிமாப் படங்களாகவும் எடுத்துக்கொண்டிருந்தனர்.

"இது என்ன நாடகம்? வீட்டில் பேசுவது போலவா நாடகத்திலும் பேசுவது? வீடுகளில் நடப்பவற்றை யெல்லாம் மேடைகளிலும் காட்டலாமா" என்று கிண்டல் செய்தவர்கள் பல்கலைக்கழக சமூகத்திலே இருந்தனர்.

அறியாமைகளையும் பொறாமைக் குரல்க ளையும் கண்டு பேராசிரியர் அஞ்சவில்லை. அவற்றை அலட்சியம் செய்து, தான் சரியானது என்று கண்ட நாடகங்களையே தொடர்ந்து எழுதி னார். அவற்றைக் கலாநிதி வித்தியானந்தன் தயாரித்தளித்தார்.



**நாடகங்களும் நடிப்பும்**

நாடகம் எழுதுவதன் பிரதான நோக்கம் அதை நடிப்பதே, இல்லை என்றால் அதற்குப் பதில் நாவல் எழுதுவது சிறந்ததல்லவா?

நாடகங்களை எழுதி எழுதி பெட்டிக்குள் அடுக்கி வைப்பதால் யாருக்கு என்ன பயன்? ஊடகம் எதுவாயினும் நாடகம் நடிக்கப்படுகின்ற பொழுது தான் மக்கள் அதிலிருந்து உச்சப் பயன் பாட்டைப் பெறுவார்கள்!

பேராசிரியர் எழுதிய நாடகங்களை கலா நிதி அவர்கள் உடனுக்குடன் அரங்கேற்றி யதனால் தான் பேராசிரியரும் உற்சாகத்துடன் புதுப்புது நாடகங் களாக எழுதினார். அந்த நாடகங்களது சிறப்பை மட்டு மல் லாது 'மண்வாசனை நாடகம்' என்றால் எப்படி இருக்கும் என்பதையும் ஈழத் தமிழ் கூறும் நல்லு லகம் அறிந்து கொண் டது. அவை இலங்கை முழுவதிலும் அரங்கி டப்பட்டன.

**காலத்தின் தேவை**

ஈழத்துப் பாரம்பரிய தமிழ் நாடகக் கலைக்கு பேராசிரியர் வித்தியானந்தன் செய்த சேவை எல்லோருக்கும் தெரியும்.

அவர் நாட்டுக் கூத்துக்களை எடுத்து, அவற் றின் நேரத்தைக் குறைத்து நவீனப்படுத்தி அரங்கேற்றிக் காட்டியிராவிட்டாலும், நாட்டுக்கூத் துக்காரர்களே அப்பணியைச் செய்திருப்பர்.

ஈழ நாட்டிலேயே எத்தனையோ வகை நாட் டுக்கூத்துக்கள் ஆடப்பட்டு வந்திருக்கின்றன. அவர் எல்லாவகை நாட்டுக்கூத்துக்களையுமா நவீனப் படுத்திக்காட்டினார்? இன்று எல்லா நாட்டுக் கூத்துக்களுமே நேரம் குறைக்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டுத்தான் நடிக்கப்படுகின்றன. இது ஒரு காலத்தின்தேவை!

இன்று நாடகம் பார்க்கப்போகிறவர்கள் குறைவு. நாட்டுக்கூத்துப் பார்க்கப்போகிறவர்கள அதையும் விடக் குறைவு. இரவிரவாக நாட்டுக் கூத்தாடினால் இரவு முழுவதும் இருந்து அதைப் பார்ப்பதற்கு வேண்டிய பொறுமையும் நேரமும் இன்று எத்தனை பேரிடம் இருக்கின்றன?

இது ஒருவகையில் எங்கள் 'இந்துக் கோவில்களில் நடக்கும் திரு விழாக்கள்போன் றது. முன்பெல்லாம் இரவு முழுவதும் திருவிழா நடத்தினார்கள். இப்பொழுது பொழுதுபட்டு ஒரு சில மணித்தியாலங்களிலேயே இரவுத் திரு விழாக்கள் முடிந்துவிடுகின்றன. சில கோவில் களில் இரவுத் திருவிழாக்கள் பகலில் நடக்கின் றன. இதுவும் ஒரு காலத்தின் தேவை!. ★

**கலாபூஷணம்**
**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**



**கலைச்சுடர்**

தயாரிப்பு: அற்புதன்

# அடுக்கு மொழி, ஆழமான கருத்துச் செறிவு; இவையே கீர்த்தனைக்கு அவசியமானவை

இசை மூலம் இன்பத்தை அடைவதற்குக் கீர்த்தனைகள் நல்ல உருப்படிகளாக அமைந் திருக்கவேண்டியது அவசியமாகின்றது.

சங்கீத இசை நுணுக்கங்களுடன் பாடக் கூடிய கீர்த்தனைகளை இயற்றுவ தென்பது லேசானகாரியமல்ல.

இனிமையாக இசைக்கக்கூடிய வகையில் கீர்த்தனைகளை இயற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர்களுள் மீசாலையூர் ஏரம்பமூர்த்தி ஆசிரியரும் ஒருவர். இவர் நல்ல கருத்துக்கள் நிறைந்த, ஆழ்ந்த தத்துவ உண்மைகள் செறிந்த கீர்த்தனைகளை இயற்றி சங்கீத உலகினால் வர வேற்கப்பெற்றவர்.

இவர் எழுதி வெளியிட்ட "கீர்த்தனை மாலை" என்னும் நூல் இதற்குச் சான்று பகரும் ஒவ்வொரு கீர்த்தனைகளும் இவரது அனுபவ முத்துக் கள். படிக்குந்தோறும் இன்பம் பயப்பவை. இதன் அருமை பெருமை அறிந்தே இவருக்கு அண் மையில் 'கலாபூஷணம்' விருது வழங்கப்பட்டுள ளது.

இதயங்களைத் தன்பால் ஈர்த்திழுத்துக் கிறங்கவைத்து மயக்கும் தன்மைவாய்ந்த கீர்த்தனைகள் இவரது ஆக்கங்களாகச் சங் கீத உலகில் மிளிர்ந்து நிற்கின்றது.

எக்காலத்திலும் எந்நேரத்திலும் பாடக் கூடிய பக்திரசம் ததும்பும் பண்புடன் ஜனரஞ் சகமாக ரசிக்கக்கூடிய வகையிலும் அமைந்தி ருப்பது பாராட்டப்படவேண்டியதே.

இந்த இசை தொடர்பாக கலாபூ சணம் ஏரம்ப மூர்த்தி கூறும்போது:-

சங்கீதம் ஓர் அருமையான கலை. அந்தச் சங்கீதத்தை இனிமையாக அனுபவித்துப் பாடும்போது கேட்பவர் மனதில் இன்பத்தையும் சந்தோஷத்தையும் தோற்றுவிக்கும்.

அதுமட்டுமன்றி சங்கீதம் பல இசை நுணுக் கங்களையுடையது. சங்கீத வித்துவான்கள் தாம் கற்றுக்கொண்ட இசையை மற்றவர்கள் கேட்கும்படியாகக் கச்சேரி செய்யும்போது அதன் இனிமை வெளிப்படுத்தப்படுகின்றது.

நல்ல சாரீர வளம் இருந்தால்தான சங்கீ தத்தை நல்ல முறையில் பாட முடியும். குரல் வளம் சாதகமாக இருந தாலேயோக, ஸ்வரங்க ளின் நுணுக்கங்களை வெளிப்படுத்தி ரசிகர்க ளின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெறமுடியும் - என்றார்.

*கேள்வி*: உங்கள் வாழ்க்கை யைப் பற்றி....?

*பதில்*: சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த நான் ஓர் இளைப்பாறிய ஆசிரியர். இளவய திலேயே சங்கீதம் கற்கவேண்டும் என்ற ஆவ லினால் உந்தப்பெற்று ஆசையோடும் ஆர்வத் தோடும் படித்தேன்.

*கேள்வி*: கீர்த்தனைகளை இயற்றத்தொடங் கியது....?

*பதில்*: சங்கீதக் கச்சேரிகளைக் கேட்கும் போதெல்லாம் நானும் பாடவேண்டும்; நானும் பாட்டு இயற்ற வேண்டும் என்ற ஆசை எனக்குள்ளே உதயமாயிற்று. அதன் பிரதிபலனா கத்தான் கீர்த்தனைகளை இயற்றத் தொடக்கி னேன்.

*கேள்வி*: சங்கீத உருப்படிகள் எப்படி இருக்க வேண்டும்?

*பதில்*: கீர்த்தனைகள் தாள லயத்துடன் அமைந்திருக்கவேண்டும். கேட்போர் மனதைத் தொடக் கூடியதாகச் சொற்கட்டுகள் யாக்கப்பட வேண்டும்.

ராகத்தின் நுணுக்கமான வெளிப்பாடுகள் துல்லியமாகத் துலங்கும் வகையில் சீர், அசை, எதுகை, மோனைகளுடன் கேட்பவர் தம்மை அறியாமல் தலையை ஆட்டி ரசிக்கக்கூடியதாக இருத்தல் அவசியம்.

அடுக்கு மொழியோடு ஆழமான நல்ல கருத்துச் செறிவுமிக்க கீர்த்தனைகளே அனுப வித்துப்பாடக்கூடியயதாக இருக்கும்.


கீர்த்தனையைப்பாடுகின்றவர் நன்கு ரசித் துப் பொருள் விளங்கிப் பாடினால்தான் கேட் போர்களுக்கு இனிமையையும் சுகத்தையும் தரும். ராக ஆலாபனையின் போதே கீர்த்தனை யின் சிறப்புத் தன்மை வெளிப்படவேண்டும்.

கர்த்தனையின் கருத்தாழம் கேட்பவரின் உள்ளத்தில் உணர்ச்சிகளை உற்பத்தி செய்யக கூடியதாக அமைந்திருக்கவேண்டும்.

அவரின் எண்ணக் கருத்துக்கள் வெளி யிடக் கூடிய சொற்கட்டுக்கள் இருந்தால்தான் கீர்த்தனை முழுமை அடையும்.

*கேள்வி*: வெளிநாடுகளில் உங்களின் கலைப் பணி......?

*பதில்*: நான் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, சிங்கப்பூர், லண்டன் முதலான இடங்களிலும் கச்சேரிகள் செய்துள்ளேன்.



என்னுடைய கீர்த்தனைகளை நான பாடும் போது தனித்துவமான சந்தோஷமும் அலாதி யான ஒரு கிளுகிளுப்பும் கிடைக்கும்.

*கேள்வி*: நீங்கள் யாரிடம் சங்கீதம் கற்றுக் கொண்டீர்கள்?

*பதில்*: வீ.கே.கந்தையாபிள்ளை, பூதத் தம்பி, கும்பகோணம் சிவவடிவேற்பிள்ளை, மாயூரம் கோவிந்தராஜபிள்ளை, லால்குடி நீலமேகம்பிள்ளை, ரி.என்.சிவசுப்பிரமணிய பிள்ளை, பேராசிரியர் சிந்தாமணி ஆகியோ ரைக் குருவாகக் கொண்டு இசை பயின்று அதன் பின்னர் என்.சண்முகரத்தினம, ஆர்.மூர்ததி ஐயர், பொன்.முத்துக்குமாரன், பொன்.தெய் வேந்திரன், என். வீரமணிஐயர் ஆகியோரிடமும் சங்கீதத்தைக் கற்றுக்கொண்டேன்.

அவர்கள் பயிற்றுவித்த முறைப்படியே இப்போது பாடுவதால் சமூகத்தில் நல்லதோர் இடத்தைப் பிடித்துக்கொண்டேன் இது அவர்கள் போட்ட பிச்சை. ✻

**- கலாஶ்ரீ -**



யாழ்ப்பாணம் தேவா மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் கடந்தவாரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கண்டிய நடனத்தின் சில காட்சிகளையே இங்கு காண்கிறீர்கள். தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சுமார் 25 கலைஞர்கள் இந்த நடனத்தை வழங்கினர்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3610543 இலிருந்து 3625796 வரை

சீட்டிழுப்பு இல. 1518
திகதி 03.07.2004

வெற்றி எண்கள்

**16 30 33 37 46**

போனஸ் எண் **52**

ஜக்பொட் பரிசு ரூபா. **79,94,450/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 79,94,450/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 | 87 | 10,000/- | 8,70,000/- |
| 3 | 4,821 | 500/- | 24,10,500/- |
| 2 | 80,708 | 20/- | 16,14,160/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 16ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 98,354 | 10/- | 9,83,540/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் **Rs. 87,55,600/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 61,78,200/-

தொடர் இல. 2661700 க்கு மேற்பட்ட கபில நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 07 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3621498-7-23**
**3618115-1-33**
**3623441-3-66**
**3615482-8-50**
**3622702-5-60**

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 591 |
| திகதி | 02-07-2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5749464-5760888

வெற்றி இலக்கங்கள்

**10 13 43 53**

லக்கினம் கும்பம்

ஜக்பொட் பரிசு ரூபா.17,38,300/- வெல்லப்பட்டுள்ளது.
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,50,493 | 10/- | 25,04,930/- |
| 2.இலக்கங்கள் | 23,014 | 20/- | 4,60,280/- |
| 1.இல + லக்கினம் | 22,762 | 30/- | 6,82,860/- |
| 2.இல + லக்கினம் | 2,079 | 100/- | 2,07,900/- |
| 3.இலக்கங்கள் | 602 | 500/- | 3,01,000/- |
| 3.இல + லக்கினம் | 57 | 5,000/- | 2,85,000/- |
| 4.இலக்கங்கள் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 17,38,300/- | 17,38,300/- |
| மொத்தம் | 2,99,010 | | 63,80,270/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 63,80,270/-

தொடர் இல. 4783182 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 06ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**5753467-6-80**
**5754419-0-59**
**5751917-1-11**
**5751279-1-65**
**5752505-8-70**

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




05-07-2004

உடுப்பிட்டியைச் சேர்ந்த
**சுந்தரகுமார் - பவானி**
தம்பதிகளின் செல்வப் புத்திரி

## மாதவி

இன்று (05.07.2004) திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை அக்கா மாதங்கியுடன் தனது இல்லத்தில் காமாட்சி அம்பாள் துணையுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

**- குடும்பத்தினர்.**

998, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி. (33795)(34-26-14)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004

### மாதிரி வினாத்தாள் இல.02

### விடைகள்

### வினாத்தாள் I

01) 3 02) 4 03) 16 04) 10
05) 3 06) 3 07) 150பேர்
08) 600 பேர்
09) 3 10) 2 11) 2 12) 1
13) 3 14) 1 15) 2 16) 2
17) 4 18) 2 19) 3 20) 3
21) 4 22) 1 23) 2 24) 2
25) 3 26) 1 27) 3 28) 1
29) 3 30) 8 31) 2 32) 3
33) 1 34) 3 35) 2 36) 4
37) 3 38) 4 39) 2 40) 1

### வினாத்தாள் II

(1)
01) இராப்பொழுது
02) நிலவை
03) அலைகள்
04) தங்கை 5) அல்லி
06) தங்கத் தட்டுக்கு தங்கையின் முகத்திற்கு
07) வதனம்
08) தடாகம், பொய்கை
09) ஆழி, சாகரம்
10) திரைகள்
11) அழுகை
12) கவலை/துக்கம்
13) Sky 14) Pond 15) Clouds
16) Face

**02)**
01) பழுத்த 02) உறங்கி 03) கெட்ட
04) சிரிக்கிறாய்
05) பறந்தன

**03)** 01) ஆறு 02) பறவைகள்
03) உணவு 04) நன்றிகள்
05) ஏன்?

**04)** 01) விரைவாக 02) பாடத்தை 03) நேற்று நான் நுங்கு குடித்தேன்
04) ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்
05) (1) தோலும் (2) வழக்கம்

**05)** 01) பருந்து 02) மீன்கொத்தி
03) புனுகுப்பூனை/தேவாங்கு
04) டொல்பின்
05) தவளை
**06)** 01) தூரியம்பூ 02) வாழைப்பூ
03) முள்முருக்கம்பூ
04) தாமரைப்பூ
05) லில்லிப்பூ
**07)**
01) விளையாட்டு விசிறி/ பம்பர விசிறி
02) (A) நூல்
(B) நப்பர்விதை/ஊமல்
(C) ஈர்க்கு/தடி
(D) காகிதக்கீலம்/ தென்னைமட்டைக் கீலம்
03) 3
04) B
**08)**
01) 5 02) 1050ml 03) 2.5Kg/ 2½Kg
04) 24 05) 30m
**9)** 01) யாழ் 02) கிற்றார்/கித்தார்

**10)** 01) ஆயத்தமாகு 02) கவனமாக நிற்றல்/ நிமிர்ந்துநிற்றல்

**11)** 01) 100 02) 4086 03) கனவுரு
04) 7/8 05) 6
**12)** 01) ✕ 02) ✕ 03) ✓
04) ✕ 05) ✓
**13)** 01) 156ரூபா 00சதம்
02) 160 ரூபா 00சதம்
03) 125 ரூபா 00சதம்
04) 150 ரூபா 70சதம்
**14)** 01) பீதுறுதாலகாலமலை
02) 1948 மாசி 4
03) கிரி கொரங்க நடனம்
04) ஆங்கிலேயர்
05) சப்பிரகமுவ மாகாணம்
**15)** பொருத்தமான வசனங்கள்

**புள்ளித்திட்டம்**

| | |
|---|---|
| 01) | 16 புள்ளிகள் |
| 02) | 05 புள்ளிகள் |
| 03) | 05 புள்ளிகள் |
| 04) | 06 புள்ளிகள் |
| 05) | 05 புள்ளிகள் |
| 06) | 05 புள்ளிகள் |
| 07) | 07 புள்ளிகள் |
| 08) | 10 புள்ளிகள் |
| 09) | 02 புள்ளிகள் |
| 10) | 02 புள்ளிகள் |
| 11) | 10 புள்ளிகள் |
| 12) | 05 புள்ளிகள் |
| 13) | 05 புள்ளிகள் |
| 14) | 05 புள்ளிகள் |
| 15) | 12 புள்ளிகள் |
| மொத்தம்: | 100 புள்ளிகள் |

# மனமுவந்து ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையாரின் திருவருளும் குருவருளும் கைகூடியுள்ள நன்னாளாகிய இன்று சிவாச்சார்ய அபிஷேகம் பெற்று குருவாக விளங்கும்

## சிவஸ்ரீ யோ. பிரபாகரக் குருக்கள்

அவர்களை அத்தியடி வாழ். சிங்கப்பூர் ஜுவல்லறி ஸ்தாபனத்தராகிய திரு. உதயகுமாரன் குடும்பத்தினர் மனமுவந்து ஆசி வேண்டி தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து மகிழ்ந்து இன்புறுகின்றனர்.

30/16, குறுக்கு வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(33797)(26-40-16-34)

சிங்கப்பூர் ஜுவல்லறி,
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா நடராசா

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா நடராசா அவர்கள் நேற்று (04.07.2004) ஞாயிறுக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லம்மா தம்பதிகளின் புதல்வனும் தெய்வானைப்பிள்ளையின் (சரஸ்வதி) அன்புக் கணவரும் சுகிர்தமலர் (பேபி - கனடா), கமலநாதன் (நாதன் - கனடா), சோதிநாதன (சோதி - கனடா), தயாமலர் (தயா - கனடா) ஆகியோரின் அன்புத தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி (இ.போ.ச.முகாமையாளர், ஹட்டன்), திலகவதி (கனடா), கீதாபரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திருமதி சுதர்சினி கருணைதாசன் (கனடா), தீபாதர்சினி (கனடா), சிந்துயா (கனடா), சாருயா (கனடா), மதுஷன் (கனடா) ஆகியோரின் பேரனும் அருணின் (கனடா) பூட்டனும் காலஞ்சென்றவர்களான திருமதி சரவணமுத்து - அன்னப்பிள்ளை, திருமதி கணபதிப்பிள்ளை - பொன்னம்மா மற்றும் த.பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சி.சின்னத்துரை மற்றும் சி.சிவக்கொடி, திருமதி இராமணி நவரெட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2004) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக பூதவுடல் தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*தோப்பு, அச்சுவேலி.*
T.P.: 0777119325 (33800) (34-16-40)

தகவல்:
குடும்பத்தினர்.

## இ.துரைராஜா

(இளைப்பாறிய முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி)

ஹற்றன் நஷனல் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் இ.துரைராஜா நேற்றுமுன்தினம் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தவராஜா, சிவராஜா (H.N.B.வவுனியா), செல்வராஜா (H.N.B. பண்டாரவளை), யோகராஜா (கனடா), தேவராஜா (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி, சாந்தினி, சுமித்திரா, தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரூஜா, அனோஜன், விதுஷாயினி, ஹர்ஷினி, கோபி, அருண், வருண், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ராமசாமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (05.07.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது வவுனியா இல்லத்திலிருந்து இறுதிக் கிரியைகளுக்காக மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*167/14, கந்தசுவாமி கோயில் வீதி,*
*ரம்பைக்குளம்,வவுனியா.*
*T.P. 024-2220491* (சி36207)(40-16-40)

தகவல்:
தில்லைநடேசன்
T.P. 072-2119149

## சோமலிங்கம் கணேசலிங்கம்

(பிரதம லிகிதர், கட்டடத் திணைக்களம், யா/கிளிநொச்சி)



குப்பிளான் வடக்கைச் சேர்ந்த சோமலிங்கம் கணேசலிங்கம் 01.07.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமலிங்கம்- இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், யாழ்/குப்பிளான் மகாவித்தியாலய உபஅதிபர் ஞானாமிர்தத்தின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (கல்வியியற்கல்லூரி மட்டக்களப்பு), யதீஸ் (யாழ்.இந்துக்கல்லூரி க.பொ.த.உயர்தர மாணவன்), ஜீவினி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சிவதாசன் (முன்னாள் தபாலதிபர் தற்பொழுது ஜேர்மனி), பரமநாதன (கிராம அலுவலர் குப்பிளான் தெற்கு J/210), ஞானப்பிரகாசம் (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர், தற்பொழுது ஜேர்மனி), பிரகாசம் (சுவிஸ்), சிவலிங்கம் (ஜேர்மனி), செல்வராணி, இந்திராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பராணி, ஜெயக்குமாரி (ஜேர்மனி), ஞானதீபம் (யாழ்.குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியர்), யோகராணி (ஜேர்மனி), மகாலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ஏழாலை மகாவித்தியாலயம்), சுகந்தினி (சுவிஸ்), விஜி (ஜேர்மனி), சிவஞானசுந்தரம் (சுவிஸ்- ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), கதிரிப்பிள்ளை தங்கவடிவேல் (கனடா), பராசசிங்கம் - மனோன்மணி, பராசபேரின்பாலசுப்பிரமணியராசா சிவயோகம் (ஆசிரியர், யா/ஊரெழு கணேசவித்தியாசாலை), செல்வநாயகம், புனிதவதி (கனடா), வைத்தியநாதன் குணபூசணம் (ஆசிரியை, யா/புன்னாலைக்கட்டுவன் அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.07.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் காளிகோவிலடி, குப்பிளான் என்னும முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் குப்பிளான் தெற்கு காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி,*
*குப்பிளான் வடக்கு,*
*ஏழாலை.* (33798)(34-16-40)

தகவல்:
சோ.பரமநாதன் (சகோதரன்)
கிராம அலுவலர் குப்பிளான்தெற்கு J/210
க.கஜேந்திரன் (மகன்)

ௐ
சிவமயம்

## அருளாசி தந்து ஆசீர்வதித்து அருள்பெற வாழ்த்தி வணங்குகின்றோம்



எமது ஆலயத்தில் 9வருட நித்தியமாக பூஜை ஆராதனை செய்து சேவையாற்றிய

**சிவஸ்ரீ யோ.பிரபாகரசர்மா** அவர்களுக்கு இன்று எங்கள் ஆலயத்திலேயே குருப்பட்டம் தரித்து சிவாச்சாரியாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். நாங்கள் அவரை அருளாசிதந்து எம்மை ஆசர்வதித்து அருளுமாறு வாழ்த்தி எல்லாம் வல்ல அத்தியடிப் பிள்ளையாரின் கிருபாகடாட்சத்தினால், அவரது சேவை மேலும் தொடர்ந்து சிறப்புற வாழ்த்துகிறோம்.

*யாழ்.அத்தியடி பிள்ளையார் ஆலயம்.*
*அத்தியடி,யாழ்ப்பாணம்.*
பிள்ளையார் பணியில்
(33806)(35-36-13-17) ஆலய நிர்வாகத்தினர்.



## உங்களுக்கு இதயம் உண்டானால்..!

அதனைக் கவனிக்க எம்மை அனுமதியுங்கள்.

எந்த வித சத்திரசிகிச்சையுமில்லை! வெறுமனே சில ஆயுர்வேத குளிகைகள் மட்டுமே. அவை உங்கள் இதயத்தின் தடைகளை கரைத்து விடுவதுடன், அவற்றின் விலையும் குறைவு மிகக் குறைந்ததுவே.

பக்க விளைவுகளோ - அன்றி வேறெந்தப் பிரச்சினையோ இல்லை. கடந்த 6 வருடங்களில் எந்தவொரு தோல்வியும் ஏற்பட்டதில்லை. (இதற்கு உதாரணங்களாக நூற்றுக்கணக்கான முகவரிகளை நாம சமர்ப்பிக்கமுடியும்).

மேலதிக விவரங்கள் தேவைப்பட்டால் தயைகூர்ந்து எமக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்துங்கள். 5 நிமிடங்கள் மட்டுமே இதற்கு செலவழித்தால் போதும். இந்த 5 நிமிடங்களை நீங்கள் வாழ்நாளில் என்றும் நினைவு கூருவீகள். இந்த 5 நிமிடங்கள்தான் உங்கள எஞ்சிய வாழ்நாளில் மாரடைப்பு, நெஞ்சுவலி போன்ற எந்தவித நோய்குறித்த பயங்களுமின்றி சாதாரண ஆரோக்கியமான ஒரு வாழ்வை நீங்கள் வாழச்செய்யவுள்ளது.

Registered Office at:

**FAIR PHARMA (PVT) LTD**
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)

Level 5/East Tower/1C,
WORLD TRADE CENTRE, COLOMBO -01.
Phone : 0094-11-5517897, 5551879, 5558442
Fax : 0094-11-5517756
E-mail : fppvtl@lankabellnet.com
Website : www.fppvtl.com

(சி-36210-13-17-36-37)



வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது

12 வருடங்களின் பின்னர் மீண்டும்

**திருமறைக் கலாமன்றம்**

தயாரித்து வழங்கும்

## ஞான சௌந்தரி

**(இசை நாடகம்)**

ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் நீங்கள் பார்த்து உங்கள் மனங்களில் நிறைந்த

**ஞானசௌந்தரியை**

மீண்டும் ஒருமுறை பார்த்திட அரிய சந்தர்ப்பம்!

ஆசனங்களுக்கான பதிவுகளை இன்றுமுதல் யாழ். மன்ற அலுவலகத்தில் செய்துகொள்ளலாம்

ஜூலை - 9,10,11 - 2004
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில்
மாலை 7.00 மணிக்கு

அன்பளிப்பு 30/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி:* 021 - 222 2393
திருமறைக் கலாமன்றம்.
(சி-36214)(36-13-17)



## கண்ணீர் அஞ்சலி

யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரியின்
முன்னாள் தலைமை எழுதுவினைஞரான

**சுப்பர் செல்லத்துரை**

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,மாணவர்கள்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
(33805)(40-13-17-36)


## சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை, தும்பளை மேற்கு பெரிய வளவு ஸ்ரீவரத விநாயகர் ஆலயத்தின் மணவாளக்கோல விழா இன்று காலை 8மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மாலை 7மணிக்கு விசேட பூசையைத தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் விநாயகப் பெருமானும் வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெருமானும் , பத்திரகாளி சமேதராக வீரபத்திரப் பெருமானும் வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

(3-78)

★ ★ ★

செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை இரவு இடம்பெறவுள்ளது. (3-ரி)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய்,
பீனிசம், தலையிடி, தலைகால் அவியல்,
சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை
வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459



## வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில், 4 ஆம் சந்தியில் கிருஷ்ணன் கோயிலுக்கு முன்பாக 3 பரப்புக் காணியில் கூரையில்லாத வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:
**திறீ ஸ்ரார் ஹோட்டல்**
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
3817, 7125
0777 - 111460

(சி-36208)(29)



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**கணபதிப்பிள்ளை பேரம்பலம்**

எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அவர்களதும், திருமதி மங்கையர்க்கரசி வேல்முருகு ஆகியோரதும் பாசமிகு தந்தையாரின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
*புற்றளை மகாவித்தியாலயம்.* ஆசிரியர்கள்,
*புலோலி.* (C-36213)(43-18-17-36) ஊழியர்கள்.



## லஷ்மி இணுவில்



இன்று முதல
விஜய் - சாலினி,
தாமு,
தலைவாசல்விஜய்,
வையாபுரி
நடிப்பில்

**கண்ணுக்குள் நிலவு**

தினசரி: 11.00, 3.00 700 (பி.நே.)

(33807) (43)



## ராஜா யாழ்ப்பாணம்



சூர்யா ,ஜோதிகா,
(இருவேடம்)
விவேக்
நடித்த
(ரீல்ஸ்)

**பேரழகன்**

தினசரி: 10.30 2.30 6.30 9.30 (பி.நே.)

(C/35994)(29)



## நாகம்ஸ் சுன்னாகம்

அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜனி, சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன்
நடித்த





**படையப்பா**

தினசரி: 11.00 3.00 7.00 (பி.நே.)

(C/35739)



## நிரஞ்சனாஸ் சங்கானை



விஜய், திரிஷா
பிரகாஷ்ராஜ்
நடித்த

**கில்லி**

வெள்ளி, சனி, ஞாயிறு
EXTREMTIES [இரவு 8.45]

தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

(C-35653)(29)


## வேட்பாளரின் வீட்டை நோக்கி வேட்டு

துறப்பனைப் பிரதேச சபையின் உப தலைவரும் வடமத்திய மாகாண ஐ.தே.முன்னணி வேட்பாளருமான வை.எம். தௌபீக்கின் பழுனுகம இல்லத்தின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. இது குறித்து தௌபீக் கெக்கிராவ பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். தேர்தல் பிரசாரத்தை முடித்து தமது சகாக்களுடன் திரும்பும்போது பின் தொடர்ந்து வானில் வந்தவர்களே இவ்வாறு வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும், தெய்வாதீனமாக யாரும் காயமடையவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)


## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் எமது அன்புக்குரியவருமான

சிவஸ்ரீ உ.ஜீவசங்கரக்குருக்கள்
அவர்களின் அருமை மைத்துனி

**திருமதி ஜெயக்குமார் உமாதேவி**

அவர்கள் பிரான்ஸில் திடீர் மரணமானதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"லிங்க வாசா", கண்டி வீதி,* சிவஸ்ரீ இராம.ஸ்ரீதரக்குருக்கள்.
*கொடிகாமம.* (33801)(43-13-17-36) சிவஸ்ரீ இராம.ஸ்ரீரங்கக்குருக்கள.


## மரண அறிவித்தல்கள்

### சச்சிதானந்தசிவம் ஞானசீலன்

இல. 853, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட சச்சிதானந்தசிவம் ஞானசீலன் (29.06.2004) செவ்வாய்க் கிழமை இந்தியாவில் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் சச்சிதானந்தசிவம்- சிவகங்கை தம்பதிகளின் புதல்வனும் இராகுலன், ஞானரூபன், சிவாஜினி மற்றும் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2004) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
(33810)(35-36-13-17) குடும்பத்தினர்.

### நாகமுத்து தம்பு (துரைசிங்கம்)

**(இளைப்பாறிய ஆசிரியர், யா/சா.இ.கல்லூரி)**



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து தம்பு (துரைசிங்கம்) அவர்கள் நேற்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் பத்மாவதி, ராஜேந்திரன், செல்வேந்திரன், குலேந்திரன், ரவீந்திரன், கலாவதி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* தகவல்:
(33812)(36-17-18) பேரன்(ராஜ்).

### கென்றி பாலசிங்கம்



**(முன்னாள் தொழில் திணைக்கள பிரதம லிகிதர், உயர் நீதிமன்றப் பதிவாளர் - வவுனியா, கல்வித்திணைக்கள நிர்வாக அலுவலர் - வவுனியா கச்சேரி, நல்லூர் பிரதேசசெயலக பதில் உதவி அரச அதிபர்)**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஏழாலைதெற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கென்றி பாலசிங்கம் அவர்க்ள் நேற்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கென்றி - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் சின்னப்பு - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற பசுபதி ( முன்னாள் சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்)யின் சகோதரரும் நாகம்மா (இளைப்பாறிய ஆசிரியை)யின் அன்புக் கணவரும் புவனாம்பிகை (லண்டன்), கலாமோகன் (லண்டன்), லோஜனாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமாரன் (லண்டன்), சுஜாத்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தேனுகா, மஞ்சரி, பிருந்தன், கிருஷ்ணி ஆகியோரின் பேரனும் பாலசிங்கம், தர்மலிங்கம், செல்லத்துரை, சிங்கராஜா, சிவஞானம், கமலாதேவி, லோகநாதன், சிதம்பரநாதன், மகேஸ்வரி, புனிதராணி, திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"அம்பிகை மகால்"* தகவல்:
*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.* மனைவி,
*T.P.077 6505033* (33813)(36-13-17) பிள்ளைகள்.

### யோசேவ் மரியதாசன்

**(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் -அச்சுவேலி)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் யோசேவ் மரியதாசன் நேற்று (04.07.2004) ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலியில் காலமானார்.

அன்னார் றீற்றாவின் அன்புக் கணவரும் மேரிதிரேசாவின் அன்புச் சகோதரரும், ஹெறினோலட் (சவூதி), மேரி யக்குலின் (ஆசிரியை), திருக்குடும்பக் கன்னியர் மடம், மன்னார்), மேரி மக்டலின் (யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) மேரிஇமக்குலேற் (ஜீலான் மத்திய கல்லூரி, பாணந்துறை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அச்சுவேலி.* மேரி மக்டலின்பிலிப்
.(சி-36215)(36-13-17) (மகள்).

# சிறையிலிருக்கும் கருணாவின்... தமிழர் தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதை உறுதிப்படுத்தும் தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"கருணாவின் சகாக்கள் அனைவருமே அவரை விட்டு ஓடிவிட்டனர். இந்நிலையில் சிறைக்கைதி ஒருவரை போலி வேடத்தில் கருணாவின் பேச்சாளராக நடிக்க வைப்பதைத் தவிர இராணுவப் புலனாய்வுப்பிரிவினருக்கு வேறு வழியே இருக்கவில்லை" - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரினதும், உளவியல் நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளரினதும் முழு ஆதரவோடு நடத்தப்படும் வானொலி நிலையம் ஒன்றுக்குச் சச்சிமாஸ்ரர் நேரடிப் பேட்டிகளை வழங்கிவருகின்றார். இதற்காக விளக்கமறியலில் இருக்கும் சச்சிமாஸ்ரருக்கு தொலைபேசி வசதியை வழங்குவதற்கு இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் மட்டக்களப்புச் சிறை அதிகாரிகள் பலவந்தப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் தகவல்கள் குறித்துக் கருத்து வெளியிட்ட புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் ரமேஷ் "இந்த நிலைமையை நாம் மிக உன்னிப்பாகவும் கவனமாகவும் பரீசீலித்து வருகின்றோம். பதில் நடவடிக்கை எடுக்காமல் நாம் பொறுமைகாத்து, பொறுப்புணர்வுடன் நடந்து வருவதை இலங்கை இராணுவம் தவறாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனமானது" என்றார்.

மேற்படி சச்சி மாஸ்ரர் விடுதலைப் புலிகள் அமைப்பில் முன்னர் இருந்தவர். கஞ்சிக்குடிச்சாறு காட்டுப்பகுதியிலிருந்து புலிகளின் முகாம்களுக்கு விநியோகம் வழங்கவென அவரிடம் பொறுப்புக்கொடுக்கப்பட்ட நிதியை சூறையாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2002 ஆம் ஆண்டு புலிகளின் அம்பாறை மாவட்ட இராணுவப் பிரிவிலிருந்து - அமைப்பினால் அவர் வெளியேற்றப்பட்டார்.

ஆனால், கடந்த மார்ச்சில் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறித் தனித்து இயங்குவதற்கு கருணா முடிவு செய்ததும் அவ்வரை மீள அழைத்தார். அம்பாறை மாவட்டத்துக்கான தனது தளபதியாகவும் சச்சி மாஸ்டரை கருணா நியமித்தார்.

அதே மார்ச் மாதத்தில் காத்தான்குடிப் பகுதியில் வான் ஒன்றில் ஆயுதங்கள் மற்றும் கிரனேட்டுடன் சென்று கொண்டிருக்கையில் சச்சி மாஸ்டரையும் அவரது ஆள்கள் நால்வரையும் பொலீஸார் கைதுசெய்தனர்.

அன்றைய தினம் அதற்கு முன்னர் காலையில் மட்டக்களப்பு நகரத்தில் வைத்தும் அவரையும் அவரது குழுவினரையும் பொலீஸார் கைது செய்திருந்தனர். என்றாலும் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் உள்ளூர் அதிகாரி ஒருவரின் தலையீட்டை அடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர் எனப் பொலீஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், பின்னர் அவர்களைக் கைது செய்த காத்தான்குடிப் பொலீஸாரோ இவ்வித தலையீட்டை ஏற்க மறுத்ததுடன், அவர்களை விடுவிப்பதாயின் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் எழுத்து மூலக் கோரிக்கை தேவை என விடாப்பிடியாகக் கூறினராம்.

இது சரிவராமல் போகவே பொலீஸார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். மார்ச் 31ஆம் திகதி அவர்கள் நீதிவானினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பயங்கர ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு பிணை அனுமதி இல்லை என்பதால் அவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

அச்சமயத்திலேயே சச்சி மாஸ்டரை கருணாவின் பேச்சாளராகச் செயற்படுத்துவதற்கு இராணுவப் புலனாய்வுப்பிரிவு ஏற்பாடு செய்து கொடுத்தது என்று கூறப்படுகின்றது.

(ஐ-க)

## பகுப்பாய்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தபோதும் காலதாமதமாகவே தீயணைப்புப் படையினர் தளத்திற்கு வந்தனர் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி தீயணைப்புப் படையின் தலைவர் ஜ.எல்.கன்னங்கரா தகவல் தருகையில் - சம்பவத்தினத்தன்று தமக்கு மாலை 6.29 மணிக்கும் 6.30 மணிக்கும் இரு தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் அதனையடுத்து 5 நிமிடத்திற்குள் 2 தீயணைப்புப் படையணிகளைத் தாம் அனுப்பி வைத்தார் எனவும் தெரிவித்து தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார்.

(க)

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகி வீழ்ந்ததும் அவரோடு கூட வந்திருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

படுகாயமடைந்த றீகன் யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவசரசிகிச்சைப் பிரிவில் அவருக்கு நேற்றிரவு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு அவருக்குப் பலத்த பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

படையினரும் பொலீஸாரும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணைகள் நடத்தினர். இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் -

இந்தச் சம்பவத்துடன் விடுதலைப் புலிகள் தொடர்புபட்டிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றும் - யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த செனிவிரட்ண உதயனுக்குத் தெரிவித்தார்.

வாள் வெட்டுக்கு இலக்காகிய றீகன் என்பவர் ஈ.பி.டி.பி. அமைப்பின் மூத்த உறுப்பினர் ஆவார். அக்கட்சியின் சார்பில் யாழ். மாநகர சபை உறுப்பினராகவும் இருந்தவர்.

இதேவேளை -

தமது அமைப்பு உறுப்பினர் மீது விடுதலைப் புலிகளே திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று ஈ.பி.டி.பி அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ-3-9-86-6)


**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
**2005 A/L DAY CLASS**
**PHYSICAL CHEMISTRY**
திரு. N.மகேஸ்வரன்
ஆரம்பம்: 06-07-2004
காலை 7.00 மணி
(33804)(32-18-13)

**GROUP CLASSES**
**CHEMISTRY**
DIAS B.Sc. (HONS) Spl. Che.
அலகு, ஆண்டு ரீதியான துரித மீட்டல்
**COM-MATHS**
M.SRI B.Sc. PAPER CLASSES
104/4, குறுக்கு வீதி, அத்தியடி. (33643)

**IBMS**
**மாணவர்களுக்காக**
வட இலங்கையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்கிவரும் முன்னணி நிறுவனமாகிய நாம் எமது மாணவர்களிடையே கணனி அறிவின் முக்கியத்துவத்தினை உணர்த்தி அவர்களின் கணனிக் கல்விக்கு வழிகாட்டி வருகின்றோம். அந்த வகையில் கணனிக் கல்வி கற்க ஆர்வம் இருந்தும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்காக எமது முகாமையின் தீர்மானத்திற்கமைய கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம். ஆர்வமுள்ள மாணவர்கள் இத்திட்டத்தில் பங்குபற்றிப் பயனடையுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
மேலதிக விவரங்கள்:
07.07.2004 உதயனில்...!
இயக்குநர்,
IBMS
# 410, K.K.S. Road, Jaffna.
(C-36202)

**அறிவித்தல்**
24 ஆம் திகதி நடைபெறும் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டலும் மாதிரிப் பரீட்சையும்
இடம் - BRIGHTMAN - நாவலர் வீதி
காலம் - 18-07-2004 ஞாயிறு - 9 a.m.
p.உமாசங்கர் and கமல்தாசன்
★ பதிவுகள் 14-07-2004 வரை ஏற்கப்படும்.
★ இலவச கையேடு வழங்கப்படும்.
(33811)

**Spoken English With GRAMMAR**
**LECTURES BY: M.A.HARI**
புதிய பிரிவு ஆரம்பம்:
06-07-2004 செவ்வாய்க்கிழமை மாலை4மணி
TUESDAY, THURSDAY-4 p.m.-5p.m.
***HARY'S INSTITUTE***
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
(33808)(32-18-13) யாழப்பாணம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்,
IIS
100, Clock Tower Rd., Jaffna.
(C-36203)


## தமிழர் தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் வளர்ச்சியும் எழுச்சியும் மிகவும் நுட்பமான போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகும்" என அவர் மேலும் கூறுகிறார்.

தமிழின விடுதலைப் போராட்டத்தில் 265 கரும்புலிகள் தமது உயிரைத் துச்சமெனக் கருதி தமிழீழ மண்ணுக்கு தற்கொடை செய்திருக்கின்றனர்.

அத்தியாகிகளின் நினைவாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினம் இன்று வடக்கு - கிழக்கு பகுதிகளில் அனுஷ்டிக்கப்படுகிறது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் கரும்புலிகள் தினத்தை மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விடுதலைப் புலிகள் செய்திருக்கின்றனர்.

கரும்புலி நாளை ஒட்டி குடாநாடு எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

வீதிகள் எங்கும் கரும்புலிகளின் ஞாபகார்த்த பதாகைகள், சிவப்பு - மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. சிரமதானங்கள் உட்பட பல இடங்களில் பொதுச்சேவைகளில் பல பொது அமைப்புக்களும் ஈடுபட்டு வருகின்றன.

முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய நெல்லியடி மகாவித்தியாலயத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மற்றும் புங்குடுதீவு, பெருங்காட்டுச் சந்தி, காரைநகர் கதிர்காமசுவாமி கோயிலடி ஆகிய இடங்களிலும் பொது நிகழ்வுகள் இடம்பெறும்.

நெல்லியடி மில்லர் நினைவாலயம் அமைந்துள்ள பகுதியில் 60அடி உயரக் கரும்புலிகள் நினைவுமாடிப் பந்தல் அமைக்கப்பட்டு கப்டன் மில்லர், கப்டன் அங்கையற்கண்ணி உட்பட ஈழப் போராட்ட வரலாற்றில் தம்முயிர்களை ஆகுதியாக்கிய 265 கரும்புலிகளினதும் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மாலை 6 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் இருந்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்கள் 'பாண்ட்' வாத்தியம் சகிதம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த நேரமான இரவு 7.05மணிக்கு அங்கு மில்லரின் நினைவாலயத்தில் பொதுச்சுடரேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து நெல்லியடி மகாவித்தியாலய கலையரங்கில் நினைவுக்கூட்டம் இடம்பெறும். நினைவுரைகளுடன் விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டு ஆற்றும் சிறப்புரைகளும் இடம்பெறும்.

நிகழ்வில் 'உயிராயுதம்-5' என்ற ஒளிப்பேழையும், 'உயிராயுதம்-7,8' ஆகிய ஒலி நாடாக்களும் வெளியிடப்படவுள்ளன. 'கரும்புலிகளின் காவியம்' என்ற நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. கரும்புலி மாவீர்களின் பெற்றோர்கள் அங்கு வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர். அரங்க அளிக்கைகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

### மட்டக்களப்பில்

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு பழுகாமம் விளையாட்டரங்கில் நடைபெறும். இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைக்காக உயிர்நீத்த தற்கொடை மாவீரர்கள் 140 பேரின் திருவுருவப் படங்கள் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்கள் பிரதான வீதியிலிருந்து நிகழ்வு மேடைக்கு பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவர்.

அதனைத் தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்படும். அத்துடன் அதிதிகளின் உரைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் இந்நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார்.

### திருகோணமலையில்

திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்று, வெருகல், முகத்துவாரம், திருமலை நகரம் உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு திருகோணமலை கடற்படைத் தாக்குதலில் வீரமரணமடைந்த கரும்புலிகள் நினைவாலயம் புனரமைப்புச் செய்யப்பட்டிருக்கிறது. கரும்புலிகள் தின நிகழ்வில் கலை, கலாசார நிகழ்ச்சிகள் பல இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னாரில்

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான அரிப்புத்துறை பாடசாலை மைதானத்திலும், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான ஆண்டாங்குள பாடசாலை மைதானத்திலும் கரும்புலிகள் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு 265 மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய வாகன ஊர்தி கடந்த 29ஆம் திகதி தொடக்கம் மன்னார் மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் சென்றுகொண்டு இருக்கிறது. அது இன்று அரிப்புத்துறை பாடசாலை மைதானத்தை சென்றடையும்.

இம்முறை மன்னார் மாவட்டத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு விசேட உதவிகள் வழங்கப்படவிருக்கின்றமை முக்கிய அம்சமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் தலைமையிலான குழுவினர், கரும்புலிகள் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

(ஐ-9-5-6-12-15-17-30-72-86-70-117)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி மற்றும் புலிக்கொடி தாங்கிய படி நிற்கின்றன.

"தமிழர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பினனாலேயே இருக்கின்றார்கள். இதிலிருந்து தமிழர்களின் ஒற்றுமை புலப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் மேதினக் கூட்டத்தில் கூறியது"- என்று போஸ்டரில் எழுதப்பட்டுள்ளது.

"சமாதானத்தை விரும்பும் பல்கலைக்கழக மாணவர் குழு" என்ற அமைப்பின் பேரில் இந்தப் போஸ்டர் அச்சிடப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யார், எதற்காக, அரச அச்சகத்தில் இதனை அச்சிட்டார்கள் என்பதோ, அச்சிடுவதற்கான உத்தரவை அரச அச்சகத்துக்கு யார் வழங்கினார்கள் என்பதோ தெரியவரவில்லை.

(க)

# மரண அறிவித்தல்கள்

## செல்வரத்தினம் சிவமோகன் (சிவா)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட செ.சிவமோகன் (03-07-2004) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் செல்வரத்தினம் - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் இராஜரத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் பெறாமகனும் ஜெபமோகன் (இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்), காலஞ்சென்ற ரவிமோகன் மற்றும் கலாரஞ்சினி (பிரான்ஸ்), சிறிகணேஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரும் காசிநாதன் (பிரான்ஸ்), கேதாரகௌரி, லதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் கஜந்தன், காசிகா, அபிஸா ஆகியோரின் மாமனாரும் கிசோபன், தாலூ, சுருதி ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2004) திங்கட்கிழமை பி.ப. 4மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சைவப் பாடசாலை ஒழுங்கை,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (33815)(18-17-32)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கந்தையா தங்கம்மா

கம்பளி வைரவர் கோவிலடி, நாவற்குழியைச் சேர்ந்த திருமதி கந்தையா தங்கம்மா அவர்கள் நேற்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் அச்சலிங்கம் கந்தையா (ஓய்வுபெற்ற நிறைவேற்று உத்தியோகத்தர் **Hayles LTD**) அவர்களின் பாசமிகு மனைவியும் கலாதேவி, கங்காதரன் (மத்திய வங்கி) அவர்களின் அன்புத் தாயாரும் சோதிலிங்கம் (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி), மலர்மதி (நிதி அமைச்சு) ஆகியோரின் அன்பு மாமியாரும் குணாகரன், யாதவன், கீதாஞ்சலி, மயூரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1 மணியளவில் நாவற்குழி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கம்பளி வைரவர் கோவில் வீதி,*
*கேரதீவு வீதி,*
*நாவற்குழி.* (33814)(37-18-17-32)

தகவல்:
க.கங்காதரன் (மகன்),
சொ.சோதிலிங்கம் (மருமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.